ISSN: 2582–5518




புதுகை
# வரலாறு
நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351




புதன் ❖ பிப்ரவரி. 14, 2024 | சென்னை & புதுக்கோட்டை | 6 பக்கம் ❖ வரலாறு 9 ❖ இதழ் 127 ❖ ரூ.10

### கிளாம்பாக்கம் பேருந்து நிலையம் குறித்து சட்டப்பேரவையில் காரசாரமாக

# விவாதம்

## சிறு சிறு பிரச்சினைகள் அல்ல, பெரிய பிரச்சினைகளே இருந்தன. அத்தனையும் தீர்த்து வைத்து தான் பேருந்து நிலையத்தை திறந்து வைத்துள்ளோம்: முதல்வர்

சென்னை , பிப். 14–

கிளாம்பாக்கம் பேருந்து நிலையத்தில் இருந்த பிரச்சினைகள் சரி செய்யப்பட்ட பிறகே பேருந்து நிலையம் திறக்கப்பட்டது என முதல்வர் ஸ்டாலின் சட்டப்பேரவையில் விளக்கம் அளித்தார்.

கிளாம்பாக்கம் பேருந்து நிலையம் தொடர்பாக தமிழக சட்டப்பேரவையில் நேற்று (பிப்.13) விவாதம் எழுந்தது. அதிமுக உறுப்பினர் செல்லூர் ராஜு கிளாம்பாக்கம் பேருந்து நிலையத்தில் மக்கள் அவதிப்படுகிறார்கள் என்று கூறி விவாதத்துக்கு வித்திட்டார்.



செல்லூர் ராஜு கேள்விக்கு பதிலளித்த போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர், "கிளாம்பாக்கத்தை தேர்ந்தெடுத்தது அதிமுக ஆட்சியில்தான். அதிமுக ஆட்சியில் 30 சதவீதத்தில் விட்டுச் சென்ற பணியை முழுமைப்படுத்தி இன்னும் கூடுதல் வசதிகள் உடன் திறக்கப்பட்டது. பாரிமுனையில் இருந்து கோயம்பேடுக்கு பேருந்து நிலையத்தை மாற்றும்போது இதேபோன்றுதான் பிரச்சினைகள் எழுந்தன. ஒருமாற்றம்ஏற்படும்போது அதை ஏற்றுக்கொள்ள தயக்கம்இருக்கும். ஆனால், கிளாம்பாக்கத்தை பொறுத்தவரை முழுவதுமாக மக்கள் ஏற்றுக்கொண்டு அங்கே பயணித்துக் கொண்டிருக்கிறார்கள். பேருந்துகளில் பயணிக்கும் பயணிகள் யாரும் பிரச்சினைகளை எழுப்பவில்லை. பேருந்துகளில் பயணிக்காதவர்கள்தான் பிரச்சினைகளை எழுப்பி வருகின்றனர். அதிமுக ஆட்சியில் கொண்டுவந்த திட்டம் திமுக ஆட்சியில் மிகச் சிறப்பாக செயல்படுத்தப் பட்டுள்ளது.

கோயம்பேட்டில் இருந்து இயக்கப்பட்ட பேருந்துகளில் தற்போது 20 சதவீதம் பேருந்துகள் மாதவரத்தில் இருந்தும், 80 சதவீத பேருந்துகள் கிளாம்பாக்கத்தில் இருந்தும் இயக்கப்படுகிறது. வடசென்னை மக்களின் நலனுக்காக 20 சதவீதம் பேருந்துகள் மாதவரத்தில் இருந்து இயக்கப்படுகிறது. கிளாம்பாக்கம் முழுவதுமாக செயல்பட துவங்கிவிட்டது." இவ்வாறு தெரிவித்தார்.

அமைச்சர் சேகர்பாபு பேசுகையில், "கிளாம்பாக்கம் பேருந்து நிலையத்தில் நவீன வசதிகள் அதிகம் உள்ளது. முதல்கட்டமாக திறந்துள்ள நிலையில் சிறு சிறு பிரச்சினைகள் இருப்பது இயல்பு. காலப்போக்கில் இதனை சரி செய்துவிடலாம். ஆனால், பேருந்து நிலையத்துக்கு கலைஞர் பெயரை வைத்ததை ஏற்றுக்கொள்ள மனமில்லாதவர்களே தொடர்ந்து பேருந்து நிலையம் குறித்து புகார் தெரிவித்து வருகிறார்கள். எனினும், பேருந்து நிலையத்துக்கு இன்னும் தேவைப்படுகின்ற அனைத்து அடிப்படை வசதிகளையும் இந்த 45 நாட்களில் சரி செய்துள்ளோம். இன்னும் பிரச்சினைகள் இருக்கிறது என்றால், யார் சொல்கிறார்களோ அவர்களை நேரடியாக பேருந்து நிலையத்துக்கு அழைத்துச் செல்கிறோம். குறைகளை தெரிவியுங்கள். அத்தனையும் இந்த அரசு சரி செய்யும்" என்று தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் பழனிசாமி பேசுகையில், "கிளாம்பாக்கம் பேருந்து நிலையத்தை அவசரப்பட்டு திறந்துவிட்டீர்கள். சிறு சிறு வசதிகளை சரி செய்து திறந்திருந்தால் பிரச்சினைகள் எழுந்திருக்காது. பயணிகளுக்கு தேவையான வசதிகளை செய்துகொடுக்க வேண்டும் என்பதே எங்களுடைய எண்ணம்." இவ்வாறு தெரிவித்தார்.

அமைச்சர் சேகர்பாபு பதிலளிக்கையில், "அவசரப்பட்டு திறந்துவிட்டோம் என்கிறார்கள். அதிமுக ஆட்சி செய்ய தவறியதை திமுக ஆட்சி செய்துள்ளது. 2021 மார்ச் மாதமே கிளாம்பாக்கம் பேருந்து நிலைய பணிகள் நிறைவடைய ஒப்பந்தம் போடப்பட்டிருந்தது. ஆனால் அந்தக் காலகட்டத்துக்குள் 30 சதவீத பணிகளே அதிமுக ஆட்சியில் முடிந்திருந்தது. ஆனால், மீதமுள்ள 70 சதவீத பணிகளை முடித்ததுடன், மேலும் ரூ.100 கோடிக்கு பயணிகளுக்குதேவையான வசதிகளையும் திமுக ஆட்சி செய்தது" என்றார். அமைச்சர் சேகர்பாபுவின் பேச்சின்போது அவருக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் அதிமுக உறுப்பினர்கள் சலசலப்பை ஏற்படுத்தினர்.

மீண்டும் எழுந்த எதிர்க்கட்சித் தலைவர் பழனிசாமி, "2020ல் கரோனா காலம். இதனால் ஓராண்டு காலம் எந்தப் பணியும் மேற்கொள்ள இயலவில்லை. இதனால் குறிப்பிட்ட காலத்தில் பேருந்துநிலையபணிகளை முடிக்கவில்லை. பிறகு ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. நீங்கள் அதனை செய்தீர்கள். இப்போது கேட்பது சிறு, சிறு பிரச்சினைகளை சரி செய்யவேண்டும் என்பதே. சிறு சிறு பிரச்சினைகளை சரி செய்து திறந்திருந்தால் இந்த விவாதமே எழுந்திருக்காது." என்றார்.

முதல்வர் ஸ்டாலின் பதிலளிக்கையில், "சிறு சிறு பிரச்சினைகள் அல்ல, பெரிய பிரச்சினைகளே இருந்தன. அத்தனையும் தீர்த்து வைத்து தான் பேருந்து நிலையத்தை திறந்து வைத்துள்ளோம். இன்னும் ஏதேனும் பிரச்சினைகள் இருந்தால், நேரடியாக வாருங்கள் சொல்லுங்கள் தீர்த்து வைக்க காத்திருக்கிறோம். எனவே, இத்துடன் இந்த விவாதத்தை முடித்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்" என்று தெரிவித்தார்.

## சபாநாயகர் தி.மு.க. உறுப்பினர் போன்று நடந்து கொண்டார் – அண்ணாமலை குற்றச்சாட்டு

ராயபுரம் : பிப். 14–

தண்டையார்பேட்டை, பழைய வைத்தியநாதன் சாலையில் பா.ஜனதா கட்சியின் வடசென்னை பாராளுமன்ற தேர்தல் அலுவலகத்தை மாநில தலைவர் அண்ணாமலை திறந்து வைத்தார்.



அப்போது அவர் நிருபர்களிடம் கூறியதாவது :- சென்னையை பொறுத்தவரை பாதயாத்திரையை வேறுவிதமாக நடத்த இருக்கிறோம். செந்தில் பாலாஜிதனது அமைச்சர் பதவியை ராஜினாமா செய்ததை வைத்து அவருக்கு ஜாமீன் வழங்க கூடாது. சட்டசபையில் தமிழ்தாய் வாழ்த்தை முழுமையாக வாசிக்க வேண்டும்.

கருணாநிதியால் வெட்டப்பட்ட தமிழ்த்தாய் வாழ்த்தை இசைக்கக் கூடாது. ஜி.எஸ்.டி.கொண்டு வரப்பட்டதற்கு பின்பு தான் தமிழகத்தின் வரி வளர்ச்சி அதிகரிக்கப்பட்டுள்ளது. சபாநாயகர் அப்பாவு தி.மு.க. உறுப்பினர் போல் நடந்துகொண்டார். நாதிராம் கோட்சேவுக்கும் அப்பாவுக்கும் தொடர்பு இருக்கலாம். கவர்னருக்கும் கோட்சேவுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. சபாநாயகருக்கு கட்சி சார்ந்து பேச உரிமையில்லை.

ஆளுநருக்காக எழுதி கொடுத்த உரையில் 10 பொய்களை சுட்டிக்காட்டி உள்ளோம். சபாநாயகர் அப்பாவு தி.மு.க.வை விட மோசமாக உள்ளார். சென்னை வெள்ளத்தில் மக்கள் தத்தளிக்கவில்லை என்று கூறி தி.மு.க.வை கவர்னர் பாராட்ட வேண்டும் என்றால் எப்படி பாராட்டுவார்.

சென்னையிலேயே வளர்ச்சி இல்லாத பகுதி வடசென்னை தான். இங்குதான்சென்னையின் பூர்வீக மக்கள் வசித்து வருகின்றனர். பிரதமர் நரேந்திர மோடியின் அனைத்து திட்டங்களும் இந்த பகுதிக்குச் சென்று சேர வேண்டும். அதற்காகவே, இங்கு நிற்கும் என்டிஏ வேட்பாளரை வெற்றி பெறச் செய்ய வேண்டும் என்று அண்ணாமலை கூறினார்.

## செந்தில் பாலாஜியின் ராஜினாமாவை ஏற்றார் ஆளுநர் ஆர்.என்.ரவி

சென்னை, பிப். 14–

அமைச்சர் செந்தில் பாலாஜியின் ராஜினாமாவுக்கு ஆளுநர் ஆர்.என்.ரவி ஒப்புதல் அளித்துள்ளாக ஆளுநர் மாளிகை தரப்பில் வெளியிடப்பட்ட கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.





செந்தில் பாலாஜியின் ராஜினாமாவை ஏற்க வேண்டும் என முதல்வர் ஸ்டாலின் அனுப்பிய பரிந்துரையை ஆளுநர் ஏற்றுக்கொண்டதாக ஆளுநர் மாளிகை தரப்பு அறிக்கை வெளியிட்டுள்ளது. சட்டவிரோத பணப்பரிமாற்ற வழக்கில் கைதாகி, 243 நாட்களாக நீதிமன்ற காவலில் இருந்துகொண்டு இலாகா இல்லாத அமைச்சராக நீடித்து வந்தார். இதனிடையே, அமைச்சர் செந்தில் பாலாஜி, தனது பதவியை நேற்று முன்தினம் திங்கள்கிழமை ராஜினாமா செய்வதாக தெரிவித்து அதற்கான கடிதத்தை தமிழக முதல்வரிடம் வழங்கியதாக செய்திகள் வெளியாகின. இந்தநிலையில்தான் இந்த ராஜினாமாவுக்கு ஆளுநர் ஒப்புதல் வழங்கியுள்ளார்.

அமலாக்கத் துறை சார்பில் கடந்த ஆண்டு பல்வேறு இடங்களில் சோதனைகள் நடத்தப்பட்டன. இந்நிலையில் போக்குவரத்துறையில் வேலை வாங்கித் தருவதாக கூறி லஞ்சம் பெற்ற வழக்கில் அமைச்சர் செந்தில் பாலாஜி மற்றும் அவரது தம்பி அசோக் குமார் தொடர்புடைய இடங்களில் அமலாக்கத் துறையினர் சோதனை நடத்தினர்.

சட்டவிரோத பணப் பரிமாற்ற தடை சட்ட வழக்கில் அமைச்சர் செந்தில் பாலாஜிக்கு சொந்தமான இடங்களில் அமலாக்கத் துறையினர் கடந்த ஜூன் 13-ம் தேதி சோதனை நடத்தினர். சென்னை, கரூர் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் சோதனை நடத்தப்பட்டது. இந்த சோதனைகளில் பல்வேறு முக்கிய ஆவணங்களை அமலாக்கத் துறை பறிமுதல் செய்தது.

முதல் நாள் காலை 7 மணி முதல் நடத்தப்பட்ட சோதனை அடுத்த நாள் வரை நீடித்தது. இறுதியாக ஜூன் 14-ம் தேதி அமைச்சர் செந்தில் பாலாஜி கைது செய்யப்பட்டார். அப்போது திடீரென ஏற்பட்ட நெஞ்சுவலி காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அங்கு அவருக்கு தீவிரசிகிச்சை அளிக்கப்பட்டது. தொடர்ந்து மருத்துவர்களின் அறிவுறுத்தலின் பேரில் செந்தில் பாலாஜிக்கு, பைபாஸ் இதய அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. இதையடுத்து சில வாரங்கள் மருத்துவர்களின் கண்காணிப்பில் வைக்கப்பட்டார்.

சிகிச்சைக்கு பின்னர் சென்னை புழல் மத்திய சிறையில் நீதிமன்ற காவலுக்கு கொண்டு செல்லப்பட்டார். நீதிமன்றகாவலில் இருந்துவந்த செந்தில் பாலாஜி அடிக்கடி உடல்நலக்குறைவால் பாதிக்கப்பட்டார். இதையடுத்து சென்னை ஸ்டான்லி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு தொடர்ந்து சிகிச்சைகளை பெற்றுவந்தார்.

இந்த வழக்கில் கடந்த ஆக.12-ம் தேதி, சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் செந்தில் பாலாஜிக்கு எதிராக குற்றப்பத்திரிகை மற்றும் ஆவணங்களை தாக்கல் செய்தது அமலாக்கத் துறை. இதற்கிடையே கைது நடவடிக்கைக்கு பின்னர் இலாகா இல்லாத அமைச்சராக செந்தில் பாலாஜி நீடித்து வந்தார். அவர் பொறுப்பு வகித்த மின்சாரத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசுவுக்கும், மதுவிலக்குத்துறை அமைச்சர் முத்துசாமிக்கும் பிரித்து கொடுக்கப்பட்டது.

இதையடுத்து செந்தில் பாலாஜி, சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் பலமுறை ஜாமீன் மனுக்களை தாக்கல் செய்தார். ஆனால் தொடர்ந்து அவரது ஜாமீன் மனு நிராகரிக்கப்பட்டு வந்தது. அதன்பின்னர் சென்னை உயர் நீதிமன்றத்திலும் ஜாமீன் மனு தாக்கல் செய்தார். அதையும் உயர் நீதிமன்றம் நிராகரித்து தள்ளுபடி செய்தது. இந்த நிலையில், 2-வது முறையாக ஜாமீன் கோரி உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கு இன்று மீண்டும் விசாரணைக்கு வரவுள்ளது. இந்நிலையில், செந்தில் பாலாஜியின் நீதிமன்ற காவல் நாளை வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

செந்தில் பாலாஜியை இலாகா இல்லாத அமைச்சராக வைக்கும்படி ஆளுநருக்கு முதல்வர் பரிந்துரைத்திருந்தார். ஆனால், இலாகா மாற்றத்தை ஏற்றுக்கொண்ட ஆளுநர் ஆர்.என்.ரவி, இலாகா இல்லாத அமைச்சராக செந்தில் பாலாஜி தொடர்வதை ஏற்கவில்லை. இதையடுத்து, செந்தில் பாலாஜியை இலாகா இல்லாத அமைச்சராக வைத்து தமிழக அரசு நிர்வாக ஆணை வெளியிட்டது.

தமிழக அரசின் இந்த உத்தரவை எதிர்த்து சென்னை உயர் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கை விசாரித்த உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி அமர்வு, செந்தில் பாலாஜி இலாகா இல்லாத அமைச்சராக நீடிப்பது என்பது அரசியலமைப்பு சாசன நெறிமுறைகளுக்கு எதிரானது. தார்மீக அடிப்படையிலும் சரியானது அல்ல. சிறந்த ஆட்சிக்கும், நிர்வாக தூய்மைக்கும் இது உகந்தது அல்ல. எனவே, அமைச்சரவையில் அவர் நீடிக்க வேண்டுமா என்பதை தமிழக முதல்வர்தான் முடிவு செய்ய வேண்டும் என்று அறிவுறுத்தியிருந்த நிலையில் தற்போது அமைச்சர் பதவியை செந்தில் பாலாஜி ராஜினாமா செய்துள்ளார்.

## 23 வயதில் உரிமையியல் நீதிபதி தேர்வில் வெற்றி பெற்ற ஸ்ரீபதிக்கு முதல்வர் ஸ்டாலின் பாராட்டு

சென்னை, பிப். 14–

"திருவண்ணாமலை மாவட்டம், ஜவ்வாதுமலையை அடுத்த புலியூர் கிராமத்தைச் சேர்ந்த ஸ்ரீபதி 23 வயதில் உரிமையியல் நீதிபதி தேர்வில் வெற்றி பெற்றுள்ளார்.




பெரிய வசதிகள் இல்லாத மலைக் கிராமத்தைச் சேர்ந்த பழங்குடியினப் பெண் ஒருவர் இளம் வயதில் இந்நிலையை எட்டியிருப்பதைக்கண்டு மகிழ்ச்சி அடைகிறேன். சமூக நீதி என்ற சொல்லை உச்சரிக்கக் கூட மனமில்லாமல் தமிழகத்தில் வளைய வரும் சிலருக்கு ஸ்ரீபதி போன்றோரின் வெற்றிதான் தமிழ்நாடு தரும் பதில்"என்று தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

இது தொடர்பாக தமிழக முதல்வர் தனது சமூகவலை தளப்பக்கத்தில், "திருவண்ணாமலை மாவட்டம் ஜவ்வாதுமலையை அடுத்த புலியூர் கிராமத்தைச் சேர்ந்த ஸ்ரீபதி 23 வயதில் உரிமையியல் நீதிபதி தேர்வில் வெற்றி பெற்றுள்ளார். பெரிய வசதிகள் இல்லாத மலைக் கிராமத்தைச் சேர்ந்த பழங்குடியினப் பெண் ஒருவர் இளம் வயதில் இந்நிலையை எட்டியிருப்பதைக்கண்டு மகிழ்ச்சி அடைகிறேன்.

அதுவும் நமது திராவிட மாடல் அரசு தமிழ்வழியில் படித்தவர்களுக்கு அரசுப் பணிகளில் முன்னுரிமை எனக் கொண்டு வந்த அரசாணையின் வழியே ஸ்ரீபதி நீதிபதியாகத் தேர்வாகியுள்ளார் என்பதை அறிந்து பெருமை கொள்கிறேன். அவரது வெற்றிக்கு உறுதுணையாக நின்ற அவரது தாய்க்கும் கணவருக்கும் எனது பாராட்டுகள். சமூகநீதி என்ற சொல்லை உச்சரிக்கக் கூட மனமில்லாமல் தமிழகத்தில் வளைய வரும் சிலருக்கு ஸ்ரீபதி போன்றோரின் வெற்றிதான் தமிழ்நாடு தரும் பதில்.

"நெடுந்தமிழ் நாடெனும்செல்வி, –நல்ல நிலைகாண வைத்திடும்; பெண்களின் கல்வி! பெற்றநல் தந்தைதாய் மாரே, –நும்பெண்களைக் கற்கவைப் பீரே! இற்றைநாள் பெண்கல்வி யாலே, –முன்னேறவேண் டும்வைய மேலே!" என்று பதிவிட்டுள்ளார்.

## திருச்சியில் மதிமுக தேர்தல் நிதி வழங்கும் விழா புதுக்கோட்டை மாவட்டம் சார்பில் ரூ. 22 லட்சம் தேர்தல் நிதி

திருச்சி : பிப். 14–


திருச்சியில் நடைபெற்ற மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழக தேர்தல் நிதி வழங்கும் விழாவில், புதுக்கோட்டை மாவட்டம் சார்பில் ரூ. 22 லட்சம் தேர்தல் நிதியினை மாவட்ட கழக செயலாளர் எஸ்.கே.கலியமூர்த்தி தலைமையில், கழக முதன்மைச் செயலாளர் இளம் தலைவர் துரை வைகோவிடம் வழங்கினார்கள்.



இந்நிகழ்வில் புதுக்கோட்டையில் ஒரு லட்சத்திற்கு மேல் அதிக நிதியினை திரட்டிதந்து வழங்கிய இரண்டு நகர செயலாளர், ஏழு ஒன்றிய கழகச் செயலாளர்களுக்கு மாவட்ட கழகம் சார்பில் கணையாளி அணிவித்து, சால்வை அணிவித்து இளம் தலைவர் துரை வைகோ வாழ்த்து தெரிவித்தார்.

இந்நிகழ்வில் அரசியல் ஆலோசனை உறுப்பினர் வழக்கறிஞர் காசி.சிற்றரசு, மாவட்ட அவைத்தலைவர் கே.ஆரோக்கியசாமி, மாவட்ட பொருளாளர் வழக்கறிஞர் எஸ்.ராஜாஆதிமூலம், துணை செயலாளர் வி.கே.மதியழகன், ஒன்றிய செயலாளர்கள் ஞானப்பிரகாசம், எஸ்.பி.பிரபாகரன், மறவப்பட்டி கே.பாண்டியன், எஸ்.வைரமூர்த்தி, சேது கலையரசன், வழக்கறிஞர் நமச்சிவாயம், ஏ.வீரபுத்திரன், எஸ்.சவரிநாதன், எம்.சண்முகநாதன், நகர செயலாளர்கள் ஜி.கிருஷ்ணமூர்த்தி, ஜி.மோகன், முத்துதுரை, பொதுக்குழு உறுப்பினர்கள் மழையூர் ஆர்.குணசேகரன், வடகாடு செல்வம், இணையதளம் கவியரசன், கே.ஆனந்தன், செல்வராஜ், ஏழுமலை, நடராஜன், அனவேல், கணேசன், பி.குமரேசன், ரமேஷ், மாணவரணி முன்னாள் அமைப்பாளர் பிரின்சு இளவரசன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் என்.ஆர்.கண்ணன், மகளிர் அணி கேபி, என்.சித்ரா, நகர நிர்வாகிகள் ஆறுமுகம், கே.செல்வராஜ், வைகோ சேகர், எம்ஏ.பாலசுப்ரமணியன், ஜே.கருணாகரன், நகர் மன்ற உறுப்பினர் ஆர்.காசிலிங்கம், அமருல்லா, ஒன்றிய நிர்வாகிகள் அகரபட்டி அடைக்கலம், வைகோ கணேசன், வைகோ கருப்பையா மற்றும் ஏராளமான மதிமுக நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். மதிமுக இளம் தலைவர் துரை வைகோ அனைவருக்கும் வாழ்த்து தெரிவித்து பாராட்டினார்.

# இன்று




## சிந்திப்போம்.... செயல்படுவோம்









# கறம்பக்குடி அருகே குடிநீர் கேட்டு பொதுமக்கள் சாலை மறியல் போராட்டம்

கறம்பக்குடி : பிப். 14–

கறம்பக்குடி அருகே மழையூரில் குடிநீர் கேட்டு பொதுமக்கள் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.



புதுக்கோட்டை மாவட்டம், கறம்பக்குடி தாலுகா, மழையூர் ஊராட்சி கடைவீதி பகுதியில் உள்ளகுடியிருப்புபகுதிகளுக்கு கடந்த சில வாரங்களாக குடிநீர் வழங்கப்படவில்லை. இது குறித்து ஊராட்சி நிர்வாகத்திடம் முறையிட்டும் எவ்வித நடவடிக்கையை எடுக்கப்படவில்லை என கூறி அப்பகுதியை சேர்ந்த பெண்களும், பொதுமக்களும் காலி குடங்களுடன் புதுக்கோட்டை, கறம்பக்குடி சாலையில் சாலை மறியல் போராட்டம் நடத்தினர். போராட்டத்தில் ஈடுபட்டவர்களிடம் மழையூர் காவல் உதவி ஆய்வாளர் சாமிக்கண்ணு மற்றும் மழையூர் ஊராட்சி மன்ற தலைவர் கலைச்செல்வி தர்மராஜ் பேச்சுவார்த்தை நடத்தினர். இதில் குடிநீா் பிரச்சனை சரி செய்யப்பட்டு உடனடியாக குடிநீர் வழங்கப்படும் என கூறியதையடுத்து சாலைமறியல் போராட்டத்தை கைவிட்டனர். மறியல் போராட்டத்தினால் புதுக்கோட்டை, கறம்பக்குடி சாலையில் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

# "ஆளுநர் உரையின்போது நடைபெற்ற சம்பவம் தமிழக அரசின் முறையற்ற செயல்பாட்டுக்கு உதாரணம்" – ஜி.கே.வாசன்

சென்னை : பிப். 14–

தமிழக சட்டப்பேரவையில் நேற்று முன்தினம் திங்கள்கிழமை ஆளுநர் உரையின் போது நடைபெற்ற சம்பவத்துக்கு காரணம் தமிழக அரசின் முறையற்ற செயல்பாடு தான் என்று தமிழ் மாநில காங்கிரஸ் தலைவர் ஜி.கே. வாசன் எம்.பி குற்றம்சாட்டியுள்ளார்.



தமிழ் மாநில காங்கிரஸ் தலைவர் ஜி.கே. வாசன் எம்.பி இதுகுறித்துவெளியிட்டிருக்கும் அறிக்கையில், "தமிழக சட்டப்பேரவையில் நேற்று முன்தினம் திங்கள்கிழமை ஆளுநர் உரையின் போது நடைபெற்ற சம்பவத்திற்கு காரணம் தமிழக அரசின் முறையற்ற செயல்பாடு தான். தமிழக சட்டப்பேரவையில் ஆளுநரின் உரையின் போது நடைபெற்ற சம்பவம், தமிழக அரசின் முறையற்ற செயல்பாட்டுக்கு உதாரணம்.

தமிழக மக்களுக்கான, தமிழ்நாட்டுக்கான தமிழக அரசின் ஆளுநர் உரையில் சரியான செய்திகள் இடம் பெற வேண்டும். ஆனால் உண்மைக்குப் புறம்பான செய்திகள் இடம்பெற்றுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. இதற்கு காரணம் தமிழக அரசு. குறிப்பாக தமிழக ஆளுநரை தமிழக அரசு பல சமயங்களில் அவரது எதிர்ப்புக்கு ஏற்ப நடவடிக்கைகளில் ஈடுபட்டது தான்.

மேலும் தமிழக ஆளுநரின் பதவிக்கு உரிய மரியாதை, முறையான நடவடிக்கைகள் ஆகியவற்றுக்கு பாதகம் இருக்கக்கூடாது. சட்டப்பேரவையில் ஆளுநர் உரையாற்றும் போது அதற்கு எவ்விதத்திலும் இடையூறு இருக்கக்கூடாது என்பதில் தமிழக அரசு கவனம் செலுத்தவில்லை. தமிழக அரசுக்கும், ஆளுநருக்குமான விரும்பத்தாக நிகழ்வுகள் இனியும் தொடரக்கூடாது என்பதே தமிழக மக்களின் எதிர்பார்ப்பு.

தமிழக அரசு தமிழர்களுக்கான, தமிழ்நாட்டுக்கான வளர்ச்சிக்கு திட்டங்கள், நடவடிக்கைகள், செயல்பாடுகள் ஆகியவற்றில் கவனம் செலுத்தி, ஆளுநரின் செயல்பாடுகளுக்கு தேவையற்ற விமர்சனங்களை தவிர்த்து முறையாக செயல்பட வேண்டும் என்பதை தமிழ் மாநில காங்கிரஸ் சார்பில் தெரிவித்துக்கொள்கிறேன்" எனக் குறிப்பிட்டுள்ளார்.

# தத்தனூர் எம்.ஆர். கல்லூரி மாணவருக்கு தேசிய அளவிலான குறும்பட போட்டியில் சிறந்த இயக்குனர் விருது

அரியலூர் : பிப். 14–

தத்தனூர் எம்.ஆர். கல்லூரி மாணவருக்கு, தேசிய அளவிலான குறும்பட போட்டியில், சிறந்த இயக்குனர் விருது வழங்கப்பட்டுள்ளது.



திருச்சி ஹோலி கிராஸ் கல்லூரியில் நடைபெற்ற, தேசிய அளவிலான குறும்படப் போட்டியில், மீனாட்சி இராமசாமி கலை மற்றும் அறிவியல் கல்லூரி காட்சி தொடர்பியல் துறை, மூன்றாம் ஆண்டு மாணவர் அகத்தியன் (கயமை கற்க) குறும்படத்திற்கு, சிறந்த இயக்குனருக்கான விருதினை பெற்றுள்ளார்.

மேலும் குறும்படத்தில் பணியாற்றிய மாணவர்களும்பாராட்டு சான்றிதழ்கள் பெற்றனர்.

வெற்றி பெற்ற மாணவர்களுக்கு, எம். ஆர். கல்லூரியின் தாளாளர் எம்.ஆர். இரகுநாதன், இயக்குனர் முனைவர் ஆர். இராசமாணிக்கம், முனைவர் வை.தியாகராசன், முதல்வர் முனைவர் பி. சங்கீதா, துறைத்தலைவர் சி.சிலம்பரசன் மற்றும் இருபால்பேராசிரியர்கள் பாராட்டுகளை தெரிவித்தனர்.



▶ மதுரை மாநகராட்சி (வார்டு 21–22) பழைய விளாங்குடி மெயின் ரோட்டில் சமீபத்தில் அமைக்கப்பட்ட சிமெண்ட் சாலை தரமில்லாமல் அமைக்கப்பட்டதால் தூசி கிளம்பி பொதுமக்கள் பாதிக்கப்படுவதாக கூறி தீக்கதிர் அருகே பைபாஸ் ரோட்டில் திடீர் சாலை மறியலில் ஈடுபட்டனர். விரைந்து வந்த காவல்துறையினர் நடவடிக்கை எடுக்கப்படுவதாக கூறியதால் பொதுமக்கள் கலைந்து சென்றனர். உடன் நேதாஜி சுபாஷ் சேனை மாநில செயலாளர் சுமன் தேவர் மற்றும் ராம்குமார், தத்தனேரி கார்த்திக் ஆகியோர் இருந்தனர்.

# அரியலூர் அருகே வள்ளலார் கல்வி நிலையத்தில் மாணவ, மாணவிகளுக்கு இலவச கண் பரிசோதனை முகாம்

அரியலூர் : பிப். 14–

வள்ளலார் கல்வி நிலையத்தில் மாணவ, மாணவிகளுக்கு இலவச கண் பரிசோதனை முகாம் நடைபெற்றது.



அரியலூர் அருகே உள்ள லிங்கத்தடிமேடு வள்ளலார் கல்வி நிலையம், அரசு உதவி பெறும் கே.ஆர்.வி. நடுநிலைப் பள்ளியில், அகர்வால் இலவச கண் மருத்துவ பரிசோதனை முகாம் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் பங்கு கொண்ட அகர்வால் கண் மருத்துவமனை மக்கள் தொடர்பு அலுவலர் கணபதி சுப்ரமணியன் பேசுகையில், மாணவர்கள் படிக்கும்போது வகுப்பறையில் நல்ல வெளிச்சம் இருக்கும்படி பார்த்துக் கொள்ளவும், குறைந்த வெளிச்சத்தில் படித்தால் கண்கள் பாதிக்கப்படலாம், கண்களுக்கு சரியான பயிற்சிகளை தினசரி செய்ய வேண்டும் என்றார்.

முகாமில் ஒளிவிழி பரிசோதகர் தீன தயாளன், ஸ்ரீதர், முகாம் ஒருங்கிணைப்பாளர் ராஜேஷ் ஆகியோர் மாணவர்களுக்கு கண் மருத்துவ பரிசோதனை செய்து ஆலோசனை வழங்கினார்கள். 250க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகளுக்கு கண் பரிசோதனை செய்யப்பட்டது. அதில் பாதிப்புக்குள்ளாகிய 30 மாணவ, மாணவிகள் மேல் சிகிச்சைக்காக திருச்சிக்கு அழைத்து செல்லப்பட உள்ளனர். கண் சிகிச்சை முகாமில் பள்ளி ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்கள் பலர் கலந்துகொண்டனர் என்று பள்ளியின் தலைமை ஆசிரியர் பெ.சவுந்தரராஜன் கூறினார்.

# பாஜகவில் இணைந்தார் மகாராஷ்டிர முன்னாள் முதல்வர் அசோக் சவான்



மும்பை : பிப். 14–

காங்கிரஸ் கட்சியில் இருந்து விலகிய மகாராஷ்டிர முன்னாள் முதல்வர் அசோக் சவான் நேற்று பாஜகவில் இணைந்தார்.

மும்பையில் உள்ள பாஜக அலுவலகத்தில் அக்கட்சியின் மூத்த தலைவரும் மகாராஷ்டிர துணை முதல்வருமான தேவேந்திர பட்னவிஸ் முன்னிலையில், அசோக் சவான் இணைந்தார். அவரை வரவேற்றுப் பேசிய தேவேந்திர பட்னவிஸ், "மகாராஷ்டிராவின் மூத்த தலைவரும், மகாராஷ்டிர சட்டப்பேரவைக்கும், நாடாளுமன்றத்துக்கும் தேர்வு செய்யப்பட்டவரும், இரண்டு முறை மகாராஷ்டிர முதல்வராகவும் இருந்த அசோக் சவான் பாஜகவில் இணைந்துள்ளார். இது மிகப் பெரிய மகிழ்ச்சியை அளித்துள்ளது" என குறிப்பிட்டார்.

மகாராஷ்டிராவின் முக்கிய காங்கிரஸ் தலைவர்களில் ஒருவராக இருந்தவர் அசோக் சவான். மகாராஷ்டிராவின் முன்னாள் முதல்வர் சங்கர் ராவ் சவானின் மகனான இவர், அம்மாநில அமைச்சராகவும், இரண்டு முறை முதல்வராகவும் பதவி வகித்தவர். காங்கிரஸில் செல்வாக்கு மிக்க தலைவரான அவர், பாரம்பரியமான காங்கிரஸ் குடும்பத்தைச் சேர்ந்தவர். இன்னும் இரண்டு மாதங்களில் மக்களவைத் தேர்தல் வர உள்ள நிலையில், இந்த ஆண்டு அக்டோபருக்குள் மாநில சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெற உள்ள நிலையில், அசோக் சவான் காங்கிரஸ் கட்சியில் இருந்து விலகி பாஜகவில் இணைந்துள்ளார்.

அசோக் சவானின் இந்த விலகல் காங்கிரஸ் கட்சிக்கு மிகப் பெரிய பின்னடைவாகப் பார்க்கப்படுகிறது. ஏற்கெனவே, காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த மிலிந்த் தியோரா சமீபத்தில் காங்கிரஸ் கட்சியில் இருந்து விலகி ஏக்நாத் ஷிண்டே தலைமையிலான சிவ சேனா கட்சியிலும், பாபா சித்திக்கி, அஜித் பவாரின் கட்சியிலும் இணைந்தனர். இந்த நிலையில் அசோக் சவான் காங்கிரஸில் இருந்து விலகி, பாஜகவில் இணைந்திருப்பது மகாராஷ்டிராவில் காங்கிரஸ் கட்சியை மேலும் பலவீனப்படுத்தும் என கூறப்படுகிறது.

# "ரேஷன் கடைகளில் பிரதமர் மோடியின் படங்களை வைக்க முடியாது" – கேரள முதல்வர் பினராயி விஜயன் அதிரடி

திருவனந்தபுரம் : பிப். 14–

கேரள மாநில ரேஷன் கடைகளில் பிரதமர் மோடியின் புகைப்படம் வைக்கப்பட முடியாது என்று அம்மாநில முதல்வர் பினராயி விஜயன் திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.



கேரள மாநிலம் முழுவதும் தேர்ந்தெடுக்கப்பட்ட 550 ரேஷன் கடைகளில் பிரதமரின் செல்ஃபி பாயின்ட்களை நிறுவ வேண்டும் என்றும், பிரதமர் நரேந்திர மோடியின் போஸ்டர்கள் மற்றும் பேனர்களை ஒட்ட வேண்டும் என்றும், உணவுப் பொருட்களை விநியோகிப்பதற்கு மத்திய அரசின் லோகோக்கள் கொண்ட கேரி பேக்குகளைப் பயன்படுத்த வேண்டும் என்றும் கேரள மாநில உணவுத் துறைக்கு மத்திய அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது. இந்த உத்தரவு தொடர்பாக கேரள சட்டப்பேரவையில் நேற்று முன்தினம் திங்கள்கிழமை விவாதம் எழுந்தது.

அப்போது பேசிய கேரள உணவுத் துறை அமைச்சர் ஜி.ஆர்.அனில், "பிரதமர் மோடியின் புகைப்படம் கொண்ட 14,000 பேனர்கள் மற்றும் போஸ்டர்களை கேரள ரேஷன் கடைகளில் ஓட்ட வேண்டும் என மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது. இந்த உத்தரவுகளை செயல்படுத்த அதிகாரிகள் குழுவையும் நியமித்துள்ளது. தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் வழங்கப்படும் ரேஷன் விநியோக முறையை தேர்தல் விளம்பரத்துக்கு பயன்படுத்துவது சரியல்ல. விவாதங்களுக்கு பின் இந்த விவகாரத்தில் முடிவெடுக்கப்படும்" என்று தெரிவித்தார்.

அதேபோல் சட்டப்பேரவையில் பேசிய கேரள முதல்வர் பினராயி விஜயன், "கேரளாவில் நீண்ட காலமாக ரேஷன் விநியோக திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. எனினும், அதில் இதுவரை இல்லாத வகையில் புதிய விளம்பர முறையை மத்திய அரசு செயல்படுத்தி வருகிறது. இது வரவிருக்கும் மக்களவைத் தேர்தலுக்கான பிரச்சாரம் என்பது தெள்ளத் தெளிவாகிறது.

இது சரியல்ல என்பதனையும், கேரளத்தில் இதனை செயல்படுத்துவது கடினம் என்பதையும் மத்திய அரசிடம் தெரிவிப்போம். மக்களவைத் தேர்தலுக்கான பிரச்சாரமாக மத்திய அரசு இதனை பயன்படுத்தும் என்பதால், இந்த விவகாரம் குறித்து இந்திய தேர்தல் ஆணையத்திடம் தெரிவிக்கவும் கேரள அரசு முயற்சி எடுக்கும்." என்று விளக்கம் அளித்தார்.

# சாந்தன் தாயகம் செல்ல ஒருவாரத்தில் உத்தரவு பிறப்பிக்கப்படும் சென்னை உயர்நீதிமன்றத்தில் மத்திய அரசு தகவல்

சென்னை : பிப். 14–

சாந்தன் தாயகம் செல்ல ஒருவாரத்தில் உத்தரவு பிறப்பிக்கப்படும் என சென்னை உயர்நீதிமன்றத்தில் மத்திய அரசு தகவல் தெரிவித்துள்ளது.



முன்னாள் பிரதமர் ராஜிவ்காந்தி கொலை வழக்கில் ஆயுள் தண்டனை கைதிகளாக இருந்த நளினி, முருகன், சாந்தன் உள்பட ஏழு பேரை விடுதலை தீர்ப்பளித்தது. விடுதலை செய்யப்பட்ட இலங்கை நாட்டை சேர்ந்த முருகன், சாந்தன் உள்ளிட்டோர் திருச்சி அகதிகள் முகாமில் அடைக்கப்பட்டுள்ளனர்.

நோய்வாய்ப்பட்டுள்ள தனது தாயை கவனிப்பதற்காக தன்னை இலங்கைக்கு அனுப்பி வைக்க உத்தரவிடக் கோரி சாந்தன் சென்னை உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்தார். இந்த வழக்கு நீதிபதிகள் ஆர்.சுரேஷ் குமார் மற்றும் கே.குமரேஷ் பாபு ஆகியோர் அடங்கிய அமர்வு முன்பு நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது அரசு தரப்பில் ஆஜரான கூடுதல் வழக்கறிஞர் ஆர்.முனியப்பராஜ், பிப்ரவரி 2, 2024 அன்று மாநில அரசுக்கு துணை உயர் ஆணையம் எழுதிய கடிதத்தின் நகலை சமர்ப்பித்தார். சாந்தன் தாயகம் திரும்புவதற்கான தற்காலிக பயண ஆவணத்தை இலங்கை துணை தூதரகம் அனுப்பியுள்ளது. இலங்கை துணை தூதரகம் அனுப்பியுள்ள ஆவணங்கள் மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

இதனையடுத்து மத்திய வெளியுறவுத் துறை தரப்பில் ஏ.ஆர்.எல்.சுந்தரேசன் ஆஜராகினார். தமிழ்நாடு அரசு அனுப்பிய ஆவணம் வந்து சேரவில்லை. தற்போது நீதிமன்றத்தில் வழங்கப்பட்ட ஆவணங்களைவெளியுறவு அமைச்சகத்துக்கு அனுப்பி வைக்கிறோம் என்று தெரிவித்தார். அதனடிப்படையில், சாந்தனை இலங்கை அனுப்புவதற்கான உத்தரவு ஒரு வாரத்தில் பிறப்பிக்கப்படும் என மத்திய அரசு சார்பில் தெரிவிக்கப்பட்டது. இதுதொடர்பாகவிளக்கம் அளிக்க மத்திய அரசிற்கு உத்தரவிட்ட நீதிபதிகள், தாயை கவனித்துக் கொள்ள தன்னை இலங்கைக்கு அனுப்ப கோரி சாந்தன் தாக்கல் செய்தமனு பிப்ரவரி.29க்கு ஒத்திவைக்கப்பட்டது.



▶ மதுரை மாவட்டம், திருப்பரங்குன்றம் தாலுகா, நாகமலை புதுக்கோட்டையில் தீபக் கிளினிக் நேற்று கோலாகலமாக தொடங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் பல்வேறு துறையைச் சார்ந்தவர்கள், ஆனா மோகன், சம்பத்குமார், சந்திரசேகரன், பசும்பொன் பாண்டியன், அர்ச்சனா ஹோட்டல் செல்வம், வெஸ்டன் பார்க் நித்தியானந்தம், பெரிஸ் மகேந்திரவேல், டாக்டர் அசோக் சக்கரவர்த்தி, டாக்டர் அரிவராசன், டாக்டர் வாசுதேவன், டாக்டர் பிஷப் ராஜ்குமார், எம்.ஆர்.ஜெயக்குமார் நாகமலை புதுக்கோட்டை தலைவர், வரிச்சியூர் செல்வம் மற்றும் பிரபலமான மருத்துவமனைகளின் டாக்டர்கள், நிர்வாகிகள், உறவினர்கள், ஊர் பொதுமக்கள், அனைத்து கட்சி பிரமுகர்கள் கலந்துகொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்.

# விவசாயிகளின் குரலை ஒடுக்க முயல்கிறது மோடி அரசு – மல்லிகார்ஜுன கார்கே கண்டனம்

புதுடெல்லி : பிப். 14–

பஞ்சாபில் இருந்து விவசாயிகள் 'டெல்லி சலோ' அணிவகுப்பை தற்போது தொடங்கி உள்ளனர்.



கடந்த 2020–ம் ஆண்டு, 3 வேளாண் சட்டங்களை எதிர்த்து டெல்லி எல்லைகளை முற்றுகையிட்டு விவசாயிகள் போராட்டத்தை தொடங்கினர். ஓராண்டுக்கு மேல் நீடித்த போராட்டத்தின் இறுதியில், வேளாண் விளைபொருட்களின் குறைந்தபட்ச ஆதரவு விலையை உறுதிப்படுத்த சட்டம்கொண்டுவரவேண்டும் என்ற கோரிக்கையுடன் போராட்டத்தை வாபஸ் பெற்றனர்.

ஆனால், 2 ஆண்டுகளுக்கு மேலாகியும் தங்களது கோரிக்கைகள் நிறைவேற்றப்படவில்லை என்று, சம்யுக்தா கிசான் மோர்ச்சா, கிசான் மஸ்தூர் மோர்ச்சா ஆகிய விவசாய அமைப்புகள் நேற்று டெல்லி நோக்கி பேரணி நடத்த அழைப்பு விடுத்திருந்தன. இந்நிலையில் பஞ்சாபில் இருந்து விவசாயிகள் 'டெல்லி சலோ' அணிவகுப்பை தொடங்கி உள்ளனர். பஞ்சாப் மாநிலம் பதேகர் சாஹிப் பகுதியில் இருந்து டிராக்டர் பேரணி தொடங்கி உள்ளது. இந்த நிலையில் விவசாயிகளின் குரலை மோடி அரசு ஒடுக்க முயல்கிறது என காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில், முள்வேலி, டிரோன்களில் இருந்து கண்ணீர் புகை, ஆணிகள் மற்றும் துப்பாக்கிகள்... எல்லாம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. சர்வாதிகார மோடி அரசு விவசாயிகளின் குரலை ஒடுக்க முயல்கிறது. விவசாயிகளை 'ஒட்டுண்ணி' என்று அழைத்து அவதூறு செய்ததையும், 750 விவசாயிகள் உயிரிழந்ததையும்நினைவில் கொள்க. 10 ஆண்டுகளில், விவசாயிகளுக்கு அளித்த மூன்று வாக்குறுதிகளை மோடி அரசு நிறைவேற்றவில்லை.

2022க்குள் விவசாயிகளின் வருவாயை இரட்டிப்பாக்குதல், சுவாமிநாதன் அறிக்கையின்படி 50 சதவிகிதம் சேர்த்து இடுபொருள் செலவுகளைச் செயல்படுத்துதல் மற்றும் குறைந்தபட்ச ஆதரவு விலைக்கு சட்ட அந்தஸ்து வழங்குதல் ஆகியவை ஆகும். இப்போது 62 கோடி விவசாயிகளின் குரல் எழுப்ப வேண்டிய நேரம் வந்துவிட்டது. சத்தீஸ்கர் மாநிலம் அம்பிகாபூரில் நடைபெறும் நிகழ்ச்சியில் விவசாயிகளுக்கு நீதிக்கான குரலை காங்கிரஸ் எழுப்பும். நாங்கள் பயப்பட மாட்டோம், தலைவணங்க மாட்டோம், என தெரிவித்துள்ளார்.

செல்லியம்மன் கண்டிகை பகுதியில் உடைந்து விழும் நிலையில் உள்ள

# மின்கம்பத்தை மாற்றி அமைக்க வேண்டும் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்





ஊத்துக்கோட்டை,பிப்14–

திருவள்ளூர் மாவட்டம், எல்லாபுரம் ஒன்றியம், பூச்சிஅத்திப்பேடு ஊராட்சியை சேர்ந்த வேம்பேடு கிராமத்தில் செல்லியம்மன் கண்டிகை என்ற பகுதி உள்ளது. இப்பகுதியில் உள்ள சுடுகாடு மற்றும் ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி ஆகியவற்றிற்கு இடையே அலமாதியில் இருந்து உயர் அழுத்த மின்சாரம் வரும் ட்ரான்ஸ்பார்மர் ஒன்று உள்ளது. இந்த ட்ரான்ஸ்பார்மரில் இருந்து இப்பகுதியில் உள்ள நூற்றுக்கணக்கான வீடுகளுக்கு மின்சார சப்பை நடைபெற்று வருகிறது.

இந்நிலையில், இந்த ட்ரான்ஸ்பார்மரை தாங்கி பிடிக்கும் இரண்டு சிமெண்ட் கம்பங்கள் உளுத்து போய் இரும்பு கம்பிகள் வெளியே தெரிகின்றது.பலத்த காற்று வீசினால் இந்த சிமெண்ட் கம்பங்கள் உடைந்து கீழே விழும் அவல நிலை ஏற்பட்டு உள்ளது.எனவே,விபத்து ஏற்படும் முன்னர் இந்த மின் கம்பங்களை மாற்றி தர வேண்டும் என இப்பகுதியைச் சேர்ந்த கிராம மக்கள் அலமாதியில் உள்ள துணை மின் நிலைய அதிகாரிகளிடம் பல முறை கோரிக்கை மனு கொடுத்தும் பயன் இல்லையாம்.

கடந்த ஆண்டு ஆயிலச்சேரி கிராமத்தில் அலமாதி துணை மின் நிலையத்தில் இருந்து உயர் அழுத்த மின்சாரம் செல்லும் மின்கம்பம் உடைந்து விழுந்ததால் வயல்வெளியில் இயற்கை உபாதை கழித்துக் கொண்டிருந்த ஒருவர் உயிரிழந்தார். மேலும், கோடுவெளி கிராமத்தில் மின் ஒயர் அறுந்து விழுந்ததால் 10 ஆடுகள்,ஒரு மாடு,ஒரு விவசாய பெண் கூலித் தொழிலாளி உள்ளிட்டோர் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

எனவே, உயிர் பலி ஏற்படும் முன்னர் இப்பகுதியில் உள்ள உளுத்துப்போன மின்கம்பங்களை போர்க்கால அடிப்படையில் மாற்றி அமைக்க வேண்டும் என இப்பகுதியைச் சேர்ந்த பொதுமக்களும், சமூக ஆர்வலர்களும் சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.

# முதியவருக்கு புதிய வீடு கட்டிக் கொடுத்து புத்தாடை வழங்கி புமனை புகுவிழாவும் நடத்திய இளைஞர்





தரங்கம்பாடி, பிப். 14–

மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடி தாலுக்கா, பெரம்பூர் கிராமத்தைச் சேர்ந்தவர் பாரதி மோகன். வெளிநாட்டில் பணிபுரிந்து வந்த பாரதிமோகன் மயிலாடுதுறை மாவட்டத்தில் உள்ள ஆதரவற்ற மனநிலை பாதிக்கப்பட்டோர் மற்றும் ஏழைகளின் நிலை குறித்து அறிந்து அவர்களுக்கு உதவி செய்யும் வகையில் சமூக ஆர்வலராக தன்னை மாற்றிக் கொண்டார்.

வெளிநாட்டு வேலையை விட்டு சொந்த ஊர் திரும்பிய பாரதிமோகன் மயிலாடுதுறை மாவட்டம் முழுவதும் பேருந்து நிலையம், மற்றும் ஆதரவற்றுத் திக்கற்ட்டு சாலையில் திரியும் நபர்களை கண்டறிந்து உணவு வழங்கும் பணியை துவங்கினார். இவரது சேவையை உணர்ந்த நண்பர்கள் மற்றும் சமூக ஆர்வலர்களின் ஆதரவோடு கடந்த 15 ஆண்டுகளாக பல்வேறு சமூக சேவைகளை செய்து வருகிறார்.

குறிப்பாக ஆதரவற்ற மக்களுக்கு உணவு வழங்குவதுடன் மனநலம் குன்றி சாலையில் சுற்றித்திரிவோர்களை அடையாளம் கண்டு அவர்களுக்கு முடி திருத்தம் செய்து, புத்தாடைகள் அணிவித்து அவர்களின் நிலையை மாற்றி அவர்களது உறவினர்களிடம் தகவல் தெரிவித்து அந்தந்த காவல் நிலையங்கள் மூலம் ஒப்படைத்து வருகிறார். இவரது சமூக சேவையின் ஒரு படியாக திருக்கடையூர் அருகே சீவக சிந்தாமணி கிராமத்தில் இடிந்து போன குடிசை வீட்டில் வாழ்ந்து வந்த முதியவர் பாலசுந்தரம் என்பவரின் நிலை குறித்து அறிந்த பாரதிமோகன். அவரது கிராமத்திற்கு வந்து உண்மை நிலையை குறித்து நேரில் கேட்டறிந்தார்.

இதனை அடுத்து தன்னுடைய நண்பர்கள் மற்றும் சமூக ஆர்வலர்களின் பங்களிப்போடு ரூ.2 லட்சம் மதிப்பீட்டில் பாதுகாப்பான புதிய வீட்டை கட்டி முடித்தார். அனைத்து பணிகளும் முடிந்த நிலையில் முதியவர் பாலசுந்தரிடம் புதிய வீடு ஒப்படைக்கப்பட்டது. முதியவருக்கு வீட்டை கட்டிக் கொடுத்ததுடன் அவருக்கு புத்தாடைகள் அணிவித்து புதுமனை புகு விழாவையும் சிறப்பாக நடத்தினார்.

இளைஞர் பாரதிமோகனின் முயற்ச்சி கிராம மக்களிடையே மிகுந்த வரவேற்பு பெற்றது. சமூக ஆர்வலர் பாரதிமோனை அப்பகுதி மக்கள், சமூக ஆர்வலர்கள் பலர் பாராட்டி வருகின்றனர். இதுகுறித்து சமூக சேவகர் பாரதிமோகன் கூறுகையில் ஒவ்வொரு பகுதிகளும் உள்ள இளைஞர்கள் தங்களால் முடிந்த உதவியை ஏழை எளிய மக்களுக்கு செய்தால் அனைவரும் மகிழ்ச்சியுடன் வாழலாம் என தெரிவித்தார்.

# இரண்டு நாள் பயணமாக ஐக்கிய அரபு அமீரகம், கத்தார் நாடுகளுக்கு புறப்பட்டார் பிரதமர் மோடி



புதுடெல்லி : பிப். 14,

இரண்டு நாள் பயணமாக பிரதமர் நரேந்திர மோடி ஐக்கிய அரபு அமீரகம் மற்றும் கத்தார் நாடுகளுக்கு புறப்பட்டுச் சென்றார்.

கடந்த 2015-ம் ஆண்டு பிரதமர் நரேந்திர மோடி, ஐக்கிய அரபு அமீரகத்திலுள்ள அபுதாபி சென்றிருந்தபோது, பட்டத்து இளவரசர் ஷேக் முகமது பின் சயீத் அல் நஹ்யான் அபுதாபியில் சுவாமி நாராயண் கோயில் கட்டுவதற்கு 13.5 ஏக்கர் நிலத்தை தானமாக கொடுத்தார். மேலும், கூடுதலாக 13.5 ஏக்கர் நிலத்தை ஐக்கிய அரபு அமீரக அரசு கடந்த 2019-ம் ஆண்டு வழங்கியது. இதையடுத்து சுவாமி நாராயண் கோயில் கட்டும் பணிக்கு அப்போது பிரதமர் மோடி அடிக்கல் நாட்டினார். தற்போது கோயில் பணிகள் நிறைவடைந்த நிலையில் கோயிலை பிரதமர் மோடி திறந்துவைக்கவுள்ளார். பிரதமராக பதவியேற்ற பிறகு நரேந்திர மோடி, ஐக்கிய அரபு அமீரகத்துக்கு செல்வது இது ஏழாவது முறையாகும்.

அபுதாபியில் உள்ள முதல் இந்து கோயிலான சுவாமி நாராயண் கோயில், போச்சசன்வாசி அக்சர் புருஷோத்தம் ஸ்வாமி நாராயண் சன்ஸ்தா (பாப்ஸ்) எனும் அமைப்பால் கட்டப்பட்டுள்ளது. கோயில் திறப்பு விழா இன்று நடைபெற உள்ளது. இதில் பிரதமர் மோடி உட்பட பலர் பங்கேற்கின்றனர். 2 நாள் பயணத்தின் போது அமீரக இளவரசர் ஷேக் முகமது பின் சயீத் அல் நஹ்யானை, பிரதமர் மோடி சந்தித்துப் பேசவுள்ளார். மேலும் அமீரகத்தின் துணை அதிபர், பிரதமர், பாதுகாப்புத்துறை அமைச்சரையும் பிரதமர் மோடி சந்தித்துப் பேசவுள்ளார். இதைத் தொடர்ந்து துபாயில் நடைபெறும் உலக அரசு உச்சி மாநாட்டில் பங்கேற்று அவர் முக்கிய உரை நிகழ்த்தவுள்ளார்.

தனது பயணம் குறித்து எக்ஸ் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில், “இரண்டு நாள் பயணமாக ஐக்கிய அரபு அமீரகம் மற்றும் கத்தார் நாடுகளுக்குச் செல்கிறேன். எனது இந்த பயணம் இவ்விரு நாடுகளுடன் இந்தியாவுக்கு இருக்கும் இருதரப்பு உறவை மேலும் வலுப்படுத்தும். பிரதமராக பதவியேற்ற பின் ஐக்கிய அரபு அமீரகத்துக்கு ஏழாவது முறையாக செல்கிறேன். இந்தியா - ஐக்கிய அரபு அமீரகம் இடையே உள்ள நட்புறவின் ஆழத்தை இது காட்டுகிறது. எனது சகோதரர் முகம்மது பின் ஜயாதை சந்திக்க இருக்கிறேன். ஐக்கிய அரபு அமீரகத்தில் கட்டப்பட்டுள்ள முதல் இந்து கோயிலை திறந்து வைக்கும் கவுரவத்தைப் பெற இருக்கிறேன். அபுதாபியில் உள்ள இந்திய சமூகத்துடன் உரையாட உள்ளேன். கத்தார் அதிபர் தமிம் பின் ஹமாத்-ஐ சந்திக்க உள்ளேன். தமிம் பின் ஹமாத் தலைமையில் கத்தார் மிகப் பெரிய வளர்ச்சியை பெற்று வருகிறது” என பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

ஐக்கிய அரபு அமீரகத்தில் சுமார் 35 லட்சம் இந்திய நாட்டவர்கள் பணிபுரிந்து வருகின்றனர். இதன்மூலம் அந்த நாட்டில் இந்திய நாட்டு மக்கள் மிகப்பெரிய வெளிநாட்டவர் குழுவை உருவாக்கியுள்ளனர். ஐக்கிய அரபு அமீரகத்தின் சமூக-பொருளாதார மேம்பாட்டுக்காக இந்தியர்களின் பங்களிப்பு அதிகமாக உள்ளது. இந்தியா, ஐக்கிய அரபு அமீரக நாடுகளிடையே வலுவான உறவை வளர்ப்பதில் இந்தியர்கள் முக்கிய பங்கை வகிக்கின்றனர் என்று இந்திய வெளியுறவுத்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளது.



சென்னை தண்டையார்பேட்டையில் உள்ள தனியார் மண்டபத்தில் ஆர் கே நகர் தொகுதியில் அமைக்கப்பட்டுள்ள பாஜக நாடாளுமன்ற தேர்தல் அலுவலகத்தை தமிழக பாஜக தலைவர் அண்ணாமலை திறந்து வைத்தார். பாஜக நாடாளுமன்ற தலைமை தேர்தல் அலுவலகம் மற்றும் தென் சென்னையை தொடர்ந்து வட சென்னையிலும் தேர்தல் அலுவலகம் தற்போது திறந்து வைத்துள்ளனர். இந்நிகழ்ச்சியில் பாஜக மாநில துணைத்தலைவர் கரு நாகராஜன் மற்றும் பால் கனகராஜ் வடசென்னை மாவட்ட செயலாளர் கிருஷ்னகுமார், உள்ளிட்ட பாஜக முக்கிய நிர்வாகிகளும் கலந்து கொண்டனர்.



காரைக்கால் மாவட்ட நிர்வாகம் மற்றும் பல்வேறு துறைகள் சார்பாக கடந்த மாதம் 15- ஆம் தேதி முதல் நாளை 14 தேதி வரை சாலை பாதுகாப்பு மாதம் சார்பாக பல்வேறு விழிப்புணர்வு நிகழ்வுகள் மாணவ மாணவிகளுக்கு பொது மக்களுக்கும் தெரியும் வண்ணம் நடைபெற்று வந்த நிலையில் நேற்று வட்டார போக்குவரத்து துறை சார்பாக புதிய பேருந்து நிலையம் அருகில் அமைந்துள்ள வர்த்தக சபை வளாகத்தில் பொதுமக்கள் மற்றும் ஆட்டோ ஓட்டுநர்களுக்கான இலவச சிறப்பு மருத்துவ முகாம் நடைபெற்றது. காலை முதல் நடைபெற்ற இந்த சிறப்பு மருத்துவ முகாமில் அரசு பொது மருத்துவமனையைச் சேர்ந்த சிறப்பு வாய்ந்த மருத்துவர்கள் மூலம் ஏராளமான பொதுமக்கள் மற்றும் ஆட்டோ ஓட்டுநர்கள் கலந்து கொண்டு தங்கள் உடல் நிலையை பரிசோதனை செய்து கொண்டனர். இன் நிகவில் வட்டாரப் போக்குவரத்து அதிகாரி பிரபாகர ராவ் மற்றும் மோட்டார் வாகன உதவியாளர் தட்சினாமூர்த்தி மற்றும் துறை சார்ந்த ஊழியர்கள் பொதுமக்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டார்கள்.



புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வகோட்டை ஊராட்சி ஒன்றியம் குருவாண்டன் தெரு ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் பள்ளி ஆண்டு விழா பள்ளி தலைமை ஆசிரியர் மீனாள் தலைமையில் நடைபெற்றது. இதில் பள்ளி மாணவ, மாணவியருக்கு சிலம்பாட்டம், கபடி, நீளம் தாண்டுதல் உட்பட ஏராளமான விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றது. இதில் வெற்றி பெற்ற மாணவ, மாணவியருக்கு பரிசுகள் மற்றும் புத்தகங்களை பள்ளியின் எஸ்எம்சி தலைவர் ரேணுகா மற்றும் மாணவர்களின் பெற்றோர்கள் சித்ரா, புவனேஸ்வரி, மஞ்சுளா, ராஜம்மா, சரண்யா ஆகியோர் வழங்கினார்கள். பள்ளி மாணவ மாணவியரின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது. முடிவில் பள்ளியில் ஆசிரியர் தங்கமணி நன்றி கூறினார்.

# இந்தியா கூட்டணியின் தொகுதிப் பங்கீடு இன்னும் சில தினங்களில் இறுதி வடிவம் பெறும் : ஜெயராம் ரமேஷ்



அம்பிகாபூர் : பிப். 14,

இந்தியா கூட்டணியின் தொகுதிப் பங்கீடு இன்னும் சில தினங்களில் இறுதி வடிவம் பெறும் என்று காங்கிரஸ் கட்சியின் தேசிய செய்தித் தொடர்பு பொதுச் செயலாளர் ஜெயராம் ரமேஷ் தெரிவித்துள்ளார்.

காங்கிரஸ் எம்பி ராகுல் காந்தி மேற்கொண்டு வரும் இந்திய ஒற்றுமை நீதி யாத்திரை சத்தீஸ்கரில் நடைபெற்று வருகிறது. இந்நிலையில், அம்மாநிலத்தில் உள்ள அம்பிகாபூரில் செய்தியாளர்களிடம் பேசிய ஜெயராம் ரமேஷ், “இந்தியா கூட்டணியில் தொகுதிப் பங்கீடு மேற்கொள்வதில் சிறிய தாமதம் இருப்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். நாங்கள் மாநில அளவில் உள்ள சில கட்சிகளுக்கு எதிராகவும் தேர்தலை எதிர்கொள்ள வேண்டி உள்ளது. அதன் காரணமாகவே, தொகுதிப் பங்கீட்டில் சில சவால்கள் ஏற்படுகின்றன.

இந்தியா கூட்டணி என்பது 2024 நாடாளுமன்றத் தேர்தலுக்கானது. டெல்லியிலும், பஞ்சாபிலும் நாங்கள் ஆம் ஆத்மி கட்சிக்கு எதிராக போட்டியிடுகிறோம். அதேநேரத்தில், பாஜகவை தோற்கடிக்க நாங்கள் தேசிய அளவில் ஒற்றுமையாக இருக்கிறோம். இதில் உள்ள சில பிரச்சினைகளை தீர்க்க கொஞ்சம் நேரம் ஆகிறது. இது முன்பே நடந்து முடிந்திருக்க வேண்டும் என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். ஆனால், சில பிரச்சினைகள் இருந்ததன் காரணமாகவே தள்ளிப் போனது.

திமுக, தேசியவாத காங்கிரஸ், சிவ சேனா, சமாஜ்வாதி கட்சி ஆகியவற்றோடு தொகுதி பங்கீடு மேற்கொள்வதில் எங்களுக்கு எந்த பிரச்சினையும் இல்லை. ஆம் ஆத்மி கட்சியுடனும், திரிணமூல் காங்கிரஸ் கட்சியுடனும் தொகுதி பங்கீடு மேற்கொள்வதில்தான் பிரச்சினைகளை எதிர்கொள்கிறோம்.

ஆம் ஆத்மியைப் பொறுத்தவரை டெல்லியில்கூட எங்களுக்கு பிரச்சினை இல்லை. பஞ்சாபில் மட்டும்தான் பிரச்சினை. பஞ்சாபில் ஆம் ஆத்மியும், மேற்கு வங்கத்தில் திரிணமூல் காங்கிரஸ் கட்சியும் அதிக தொகுதிகளில் போட்டியிட விரும்புகின்றன. நாங்களும் அதிக தொகுதிகளில் போட்டியிட விரும்புகிறோம். இரு தரப்பும் ஒப்புக்கொள்ளக்கூடிய சமரச வழியை நாங்கள் காண இருக்கிறோம். இன்னும் சில தினங்களில் இந்தியா கூட்டணியின் தொகுதி பங்கீடு இறுதி வடிவம் பெறும்” என தெரிவித்துள்ளார்.

சிறுவாபுரி பாலசுப்பிரமணிய சுவாமி திருக்கோவிலில்

# விரைவாக தரிசனம் செய்ய நடவடிக்கை எடுக்க பக்தர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்





ஊத்துக்கோட்டை, பிப்14–

திருவள்ளூர் மாவட்டம், சோழவரம் ஒன்றியம், சின்னம்பேடு என்று அழைக்கப்படும் சிறுவாபுரியில் பிரசித்தி பெற்ற பாலசுப்பிரமணிய சுவாமி திருக்கோவில் உள்ளது. இக்கோவிலை கடந்த 2022-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் ரூ.1.25 கோடி செலவில் புனரமைத்து மகா கும்பாபிஷேகம் செய்து வைத்தனர்.

இதன்பின்னர், இக்கோவிலுக்கு சுவாமி தரிசனம் செய்ய பக்தர்களின் கூட்டம் நாளுக்கு,நாள் கட்டுக்கடங்காத வகையில் வந்த வண்ணம் உள்ளது. மேலும்,இக்கோவிலுக்கு தொடர்ந்து ஆறு வாரங்கள் செவ்வாய்க்கிழமைகளில் வந்து நெய்தீபம் ஏற்றி வழிபட்டால் வீடு, நிலம், வேலை வாய்ப்பு, திருமணம், பிள்ளைபேரு உள்ளிட்ட பக்தர்களின் வேண்டுதல்கள் நிறைவேறும் என்பது நம்பிக்கையாக உள்ளது.

இந்நிலையில்,நேற்று முருகனுக்கு உகந்த தினமான செவ்வாய்க்கிழமையாகும். மேலும், மாசி மாதத்தின் முதல் செவ்வாய்க்கிழமை ஆகும்.எனவே,நேற்று விடியற் காலை மூலவருக்கு சிறப்பு பூஜைகள், பல்வேறு வகையான திரவங்களால் சிறப்பு அபிஷேகம் செய்தனர். இதன் பின்னர்,கற்கள் பதித்த கவசம் எனப்படும் கற்பதிக அலங்காரம் மூலவருக்கு செய்யப்பட்டது.நேற்று விடியற்காலை முதலே இக்கோவிலில் பக்தர்கள் நீண்ட வரிசையில் காத்திருந்து சுவாமி தரிசனம் செய்தனர்.

மேலும், கோவிலுக்கு செல்லும் வழியையும்,தரிசனம் செய்துவிட்டு வெளியே வரும் வழியையும் ஒவ்வொரு வாரமும் மாற்றி,மாற்றி அமைப்பதால் பக்தர்கள், முதியவர்கள், பெண்கள்,குழந்தைகள் உள்ளிட்டோர் கோவிலுக்குள் செல்வதிலும், வெளியே வருவதிலும் குழப்பம் ஏற்பட்டு அவதிக்கு உள்ளானார்கள். சென்னை,காஞ்சிபுரம், திருவள்ளூர்,செங்கல்பட்டு உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்தவர்களும், ஆந்திரா, கர்நாடகா உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களைச்சேர்ந்தவர்களும் இக்கோவிலுக்கு வந்து நீண்ட வரிசையில் சுமார் 3 மணி நேரம் காத்திருந்து சாமி தரிசனம் செய்தனர்.மேலும், பொது தரிசனம்,ரூ.100 கட்டண தரிசனம் உள்ளிட்ட வரிசையில் சுமார் 3 மணி நேரம் காத்திருந்து பக்தர்கள் சாமி தரிசனம் செய்தனர்.இதனால் முதியவர்கள்,குழந்தைகள், மாற்றுத்திறனாளிகள் உள்ளிட்டோர் கோவிலுக்கு வெளியே நீண்டு இருந்த வரிசையில் கால் கடுக்க குடிநீர் இன்றியும்,கடும் வெயிலையும் பொருட்படுத்தாமல் காத்திருந்து சுவாமி தரிசனம் செய்தனர்.

இதனால் பக்தர்கள் மிகவும் அவதிக்கு உள்ளானார்கள். கூட்டம் கட்டுக்கடங்காமல் வந்ததால் சிறுவாபுரி-புதுரோடு சாலையிலும்,சிறுவாபுரி-அகரம் சாலையிலும் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது.மேலும்,சாலையின் இருபுறமும் வியாபாரிகள் சாலையை ஆக்கிரமிப்பு செய்து கடைகள் வைத்திருந்ததால் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. இதனால் பெரியபாளையத்தில் இருந்து செங்குன்றம் செல்லும் தடம் எண்:547,கோயம்பேட்டில் இருந்து ஆரணிக்கு செல்லும் தடம் எண்:114டி ஆகிய பேருந்துகள் மாற்றுப் பாதையில் இயக்கப்பட்டது. இதனால் பேருந்து ஓட்டுநர்கள் மிகவும் சிரமத்துடன் பேருந்துகளை இயக்கினர். எனவே,மாவட்ட கலெக்டர்,இந்து சமய அறநிலையத்துறை அதிகாரிகள்,மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் உள்ளிட்டோர் பக்தர்கள் விழா காலங்களிலும், செவ்வாய்க்கிழமைகளிலும் விரைவாக தரிசனம் செய்யவும்,விரைவாக கோவிலில் இருந்துவெளியே வரவும் உரிய வழி வகையை ஏற்படுத்தி தர வேண்டும். மேலும்,விரைவான வாகன போக்குவரத்துக்கு உரிய வழிவகை செய்து தர வேண்டும் என சமூக ஆர்வலர்களும், பக்தர்களும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சென்னை தண்டையார்பேட்டையில் மாநகராட்சி நான்காவது மண்டல குழு கூட்டத்தில்

# 8 கோடியே 64 லட்ச ரூபாய் செலவில் 81 திட்டங்கள் நிறைவேற்ற தீர்மானம்



சென்னை, பிப். 14–

சென்னை தண்டையார்பேட்டை பெருநகர மாநகராட்சி நான்காவது மண்டலத்தில் மண்டல குழு கூட்டம் நடைபெற்றது. மண்டல குழு தலைவர் நேதாஜி கணேசன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் உதவி ஆணையர் விஸ்வநாதன், திமுக, காங்கிரஸ் கம்யூனிஸ்ட், விடுதலை சிறுத்தைகள், உள்ளிட்ட கட்சியை சேர்ந்த மாமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டு வார்டில் உள்ள பிரச்சனைகள் குறித்து எடுத்துக்கூறிவிவாதிக்கப்பட்டது.


நாடாளுமன்றத் தேர்தல் நெருங்குவதால் மாநகராட்சியிடம் அனுமதி இல்லமால் அரசியல் கட்சியினர், தனிநபர் விளம்பர பேனர் பொது இடங்களில் வைக்கிறார்கள். அனுமதி இன்றி வைக்கப்படும் பேனர்களை அகற்ற வேண்டும் இதனால் பொது மக்களுக்கு பாதிப்பு ஏற்படுவதாக 41வது வார்டு கம்யூனிஸ்ட் கட்சி மாமன்ற உறுப்பினர் விமலா குற்றச்சாட்டை முன் வைத்தார்.

அனுமதி இன்றி வைக்கப்படும் பேனர்கள் அகற்றப்படும் தடைகளை மீறி பேனர் வைத்தால் மாநாகராட்சி அதிகாரிகள் காவல்நிலையத்தில் புகார் அளித்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று முடிவு செய்யப்பட்டது அழைத்தால் இணைப்பு குடிநீர் திட்டத்தின் கீழ் புதியதாக குடிநீர் இணைப்பு வழங்கப்படும் போது சாலையை தோண்டி இணைப்பு கொடுத்த பின் மீண்டும் அந்த சாலையை மாநகராட்சி அதிகாரிகளுக்கு தெரிவிக்காமல் விட்டு விடுகிறார்கள்.

அதனை சரி செய்யவும் முறையாக மாநகராட்சி அதிகாரிகளுக்கு தெரியப்படுத்த வேண்டும் என்று எடுத்துரைக்கப்பட்டது. கூட்டத்தில் முக்கிய தீர்மானமாக காசிமேடு எம் கே பி நகர் வியாசர்பாடி சர்மா நகர் தண்டையார்பேட்டை உள்ளிட்ட பகுதிகளில் ரேஷன் கடை புதிய வகுப்பறைகள் பூங்காக்கள் ஸ்கேட்டிங் விளையாட்டு திடல் உடற்பயிற்சி கூடம் என 8 கோடியே 64 லட்சம் ரூபாய் செலவில் 81 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தண்டையார்பேட்டை பட்டேல் நகரில் சென்னை மாநகராட்சி மேல்நிலைப்பள்ளியில் கடந்த 25 ஆண்டுகளாக பத்தாம் வகுப்பு 11ஆம் வகுப்பு 12ஆம் வகுப்பு பொதுத் தேர்வு எழுதுவதற்கு 5 கிலோமீட்டர் தூரம் பேருந்தில் பயணித்து துறைமுக பள்ளியில் எழுதும் நிலை இருந்துவந்தது இதனை அடுத்து மாணவர்களின் கால நேர விரையும் பாதுகாப்பில்லாத பயணம் உள்ளிட்ட பிரச்சினை குறித்து மாநகராட்சி கூட்டத்தில் மாமன்ற உறுப்பினர் நேதாஜி கணேசன் எடுத்துரைத்தார். இதனைத் தொடர்ந்து இந்த ஆண்டு பொது தேர்வு மாணவ மாணவிகள் பயிலும்அதே பள்ளியில் எழுதுவதற்கு அனுமதி அளிக்கப்பட்டது. அதற்கு மாநகராட்சி மேயர் மாநகராட்சி ஆணையர்க்கு நன்றி தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

# கறம்பக்குடி அருகே கோரிக்கைகளை வலியுறுத்தி தமாகா விவசாய அணி ஆர்பாட்டம்



கறம்பக்குடி : பிப். 14–

புதுக்கோட்டை மாவட்டம், கறம்பக்குடி அருகே துவாரில் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழ் மாநில காங்கிரஸ் விவசாய அணி சார்பாக மாநில தலைவர் துவார் சி.ரெங்கராஜன் தலைமையில் ஆர்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்தில் அரசு கொள்முதல் நிலையங்களில் விவசாயிகளிடம் வசூலிக்கும் தொகையை ரத்து செய்ய வேண்டும், விவசாயிகள் தாங்கள் பயிரிட்ட நெற்பயிரை மிகுந்த சிரமபட்டே அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையத்திற்க்கு கொண்டு வருகின்றனர். அவ்வாறு கொண்டுவரும் விவசாயிகளிடம் ஒவ்வொரு கொள்முதல் நிலையத்திலும் ரூ. 40 முதல் 50, 60 என வசூலிக்கின்றனர். இதனால் விவசாயிகள் கடும் சிரமத்துக்கு உள்ளாகி தனியாரிடம் கடன் வாங்கும் நிலைக்கு தள்ளபடுகின்றனர். இது போன்று வசூல் செய்யும் தொகை எங்கு செல்கிறது என்பது கேள்விகுறியே. எனவே இது போல் வசூல் செய்வதை முற்றிலும் ரத்து செய்திட வேண்டும்.

காவேரி குண்டாறு திட்டத்திற்க்கு போதிய நிதியை ஒதுக்கி விரைந்து முடித்து வறட்சியான மாவட்ட விவசாயிகள் பயணடையவும் தேர்தல் வாக்குறிதி 75ல் கூறியபடி நெல்லுக்கு ரூ. 2500ம் கரும்புக்கு ரூ. 4000 ஆயிரமும் வழங்கவும், தேர்தல் வாக்குறிதி 66ல் கூறியபடி கொப்பரை தேங்காயை அரசே கொள்முதல் செய்து நியாயவிலை கடைகளில் தேங்காய் எண்ணெயை வழங்கிடவும் வேண்டும். தேர்தல் அறிக்கை 56ல் கூறியபடி நியாய விலை கடைகளில் பனைதொழில் சிறக்க பனை வெல்லத்தை கொள்முதல் செய்து வழங்கிட வேண்டும். தேர்தல் அறிக்கை 57ல் கூறியபடி தனி ஒரு விவசாயி பாதிப்படைந்தாலும் உரிய இழப்பீட்டை பெற்று தரவும் வேண்டும் என ஆர்பாட்டத்தில் தமிழக அரசுக்கு கோரிக்கை வைக்கபட்டது.

# ஆலங்குடி முருக பக்தர்கள் திருச்செந்தூருக்கு பாத யாத்திரை பயணம்

ஆலங்குடி : பிப். 14-

புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடியில் இருந்து ஆண்டுதோறும் மாசி மாதம் விரதம் கடைபிடித்து திருச்செந்தூருக்கு பாதயாத்திரையாக முருக பக்தர்கள் செல்வது வழக்கம்.

30ம் ஆண்டுகளுக்கு மேலாக பாதயாத்திரையாக ஆலங்குடியில் இருந்து குருசாமி வினாஸ் ராஜசேகர் தலைமையில் 100க்கும் மேற்பட்ட முருக பக்தர்கள் திருச்செந்தூருக்கு பாதயாத்திரையை தொடங்கினர். ஆலங்குடி சிவன் கோவிலில் சிறப்பு அபிஷேக வழிபாடு செய்து கைகளில் காப்புக் கட்டிக் கொண்டு பாதயாத்திரையைத் தொடங்கினர். பேரூராட்சி மன்ற தலைவர் ராசி



முருகானந்தம், முன்னாள் தலைவர் மணமோகன், சுந்தரம் ஆகியோர் தொடங்கிவைத்தனர். பக்தர்களுக்கு பாதங்களில் நீர் ஊற்றி பாதபூஜை செய்து பொதுமக்கள் வழி அனுப்பிவைத்தனர்.

பாதயாத்திரை பயணத்தில் பக்தர்கள் முருகன் சிலையைக் கொண்ட அலங்கரிக்கப்பட்ட இரதத்தில் வெள்ளி வேல்லை திருச்செந்தூர் முருகனுக்காக கொண்டு செல்கின்றனர். ஆலங்குடியிலிருந்து 350 க்கும் மேற்பட்ட கிமீ தூரம் பாதயாத்திரை செல்லும் பக்தர்கள் 10 நாட்களில் திருச்செந்தூரில் முருகனை தரிசனம் செய்ய உள்ளனர்.



சென்னை அண்ணா அறிவாலயத்தின் துணை மேலாளர் ஜெயக்குமார் உடல்நலக் குறைவு காரணமாக இயற்கை எய்தினார். சென்னை நந்தனம் அவரது இல்லத்திற்கு சென்று தென்காசி வடக்கு மாவட்ட திமுக செயலாளர், சங்கரன்கோவில் சட்டமன்ற உறுப்பினர் ராஜா, தென்காசி தெற்கு மாவட்ட செயலாளர் வே.ஜெயபாலன், புளியங்குடி திமுக நகர செயலாளர் ஆ.அந்தோணிசாமி, சங்கரன்கோவில் நகர செயலாளர் பிரகாஷ், ஒன்றிய செயலாளர் ஏ.ஆர்.ஆர்.அழகுசுந்தரம், மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் ஜே.கே.ரமேஷ் ஆகியோர் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினர்.

# அமைச்சர் ஐ.பெரியசாமி விடுவிப்பை எதிர்த்து மேல்முறையீடு செய்யாதது ஏன்? – உயர் நீதிமன்றம் கேள்வி

சென்னை : பிப். 14-

வீட்டு வசதி வாரிய வீடு ஒதுக்கீடு முறைகேடு வழக்கில் அமைச்சர் ஐ.பெரியசாமி விடுவிக்கப்பட்டதை எதிர்த்து மேல்முறையீடு செய்யாதது ஏன் என்று லஞ்ச ஒழிப்புத் துறைக்கு சென்னை உயர் நீதிமன்றம் கேள்வி எழுப்பியுள்ளது.

கடந்த 2008-ம் ஆண்டு தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்துக்குச் சொந்தமான வீட்டை மறைந்த முன்னாள் முதல்வர் கருணாநிதியின் பாதுகாவலராக இருந்த கணேசன் என்பவருக்கு ஒதுக்கியதில் முறைகேடு செய்ததாக தொடரப்பட்ட வழக்கில், அமைச்சர் ஐ.பெரியசாமி விடுவிக்கப்பட்டார். இதற்கு எதிராக சென்னை உயர்நீதிமன்றம் தாமாக முன் வந்து வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொண்டது.

இந்த வழக்கு நீதிபதி ஆனந்த் வெங்கடேஷ் முன்பு செவ்வாய்க்கிழமை மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது, லஞ்ச ஒழிப்புத் துறை தரப்பில் ஆஜரான அரசு தலைமை வழக்கறிஞர் பி.எஸ். ராமன், அரசிடம் ஊதியம் பெறுபவர் பொது ஊழியர் என்பதால் ஆளுநரிடம்தான், வழக்கு தொடர அனுமதி பெற வேண்டும். அமைச்சர்களை நியமிக்கவும், நீக்கவும் ஆளுநருக்குதான் அதிகாரம் உள்ளது. எனவே, வழக்குத் தொடர அவர்தான் அனுமதி வழங்க வேண்டும் என உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

இந்த வழக்கில் இருந்து விடுவிக்க கோரிய மனுவுக்கு, லஞ்ச ஒழிப்புத் துறை, 2023 ஜனவரியில் தாக்கல் செய்த பதில் மனுவில், விடுவிக்க கோரிய மனு விசாரணைக்கு உகந்ததல்ல எனவும், வழக்கில் சாட்சி விசாரணை துவங்கிய பின் இடையில் விடுவிக்க கோர முடியாது என்ற நிலைபாட்டையும் தெரிவித்துள்ளது. குற்றச்சாட்டுப்பதிவுக்கு பின்னர் குற்றம் சாட்டப்பட்டவர்களை விசாரணை நீதிமன்றம் விடுவிக்க முடியாது என்று வாதிட்டார்.

இதையடுத்து வழக்கை விசாரித்த நீதிபதி, ஏன் முறையான அனுமதியை ஆளுநரிடம் பெறவில்லை என லஞ்ச ஒழிப்புத் துறைக்கு கேள்வி எழுப்பினார். இன்னும் காலம் கடந்து விடவில்லை. இனிமேலும் சென்று ஆளுநரின் அனுமதி பெறலாம். விடுவிக்கப்பட்டதை எதிர்த்து ஏன் மேல்முறையீடு செய்யவில்லை? லஞ்ச ஒழிப்புத் துறையின் செயல்பாடின்மை காரணமாகவே தாமாக முன்வந்து வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

வழக்கில் இருந்து அமைச்சர் பெரியசாமியை விடுவித்த உடனே, லஞ்ச ஒழிப்புத் துறை, உரிய ஆவணங்களுடன் ஆளுநரை அணுகிவழக்குதொடர அனுமதி பெற்றிருக்க வேண்டும். சிறப்பு நீதிமன்றமும், ஆளுநரிடம் முறையாக அனுமதி பெற லஞ்ச ஒழிப்புத்துறைக்கு உத்தரவிடவில்லை. வழக்கு நீண்ட தூரத்தை கடந்து விடவில்லை.

ஒரே ஒரு சாட்சி மட்டுமே விசாரிக்கப்பட்டுள்ளதால், ஆளுநரிடம் அனுமதி பெறலாம். அமைச்சராக இருப்பவர் மக்கள் மத்தியில் சுத்தமானவராக இருக்க வேண்டும். அதிகாரத்தில் இருப்பவருக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்கப்படும் என மக்கள் மத்தியில் நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டும் எனக் கூறி, இந்த வழக்கின் தீர்ப்பை தேதி குறிப்பிடாமல் தள்ளிவைத்துள்ளார்.

# ஆளுநர் ஆர்.என். ரவிக்கு நமது கலாச்சாரமும் தெரியாது, நடைமுறையும் தெரியாது

## திமுக மாநிலங்களவை உறுப்பினர் எம்.எம்.அப்துல்லா பேட்டி

அறந்தாங்கி : பிப். 14-

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி அருகே தேடாக்கி மற்றும் கூகனூரில் நடைபெற்ற மக்கள் நலத்திட்டங்களை துவக்கி வைக்க மாநிலங்களவை உறுப்பினர் எம்.எம்.அப்துல்லா நேற்று வருகை தந்தார்.

பின்னர் ரூ. 12 லட்சத்து 50 ஆயிரம் மதிப்புள்ள நியாய விலைக்கடை மற்றும் ரூ.14 லட்சம் மதிப்பீட்டில் மேல்நிலை நீர்தேக்க தொட்டி கட்டுவதற்கு அடிக்கல் நாட்டினார். பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய போது, ஆண்டாண்டு காலமாக



சட்டப்பேரவையில் மரபு என்பது சட்டமன்றம் தொடங்கும் போது தமிழ்த்தாய் வாழ்த்து பாடுவதும் முடிக்கும் போது தேசியகீதம் பாடுவதும் தான்மரபு. ஆளுநர் எங்கிருந்தோ வந்தவர் அவருக்கு நமது கலாச்சாரமும் தெரியாது, நடைமுறையும் தெரியாது, அதனாலதான் ஆளுநர் என்பவர் எப்போதும் தேவையில்லை, ஆட்டுக்கு தாடியும், நாட்டுக்கு ஆளுநரும் தேவையில்லை என்பது திராவிட இயக்கத்தினுடைய நிலைப்பாடாக இருக்கிறது என்றும் பேசினார்.

நிகழ்ச்சியில் அறந்தாங்கி தெற்கு ஒன்றிய செயலாளர் பொன்.கணேசன், மணமேல்குடி வடக்கு ஒன்றிய செயலாளர் சக்தி.ராமசாமி, சுப்பிரமணியபுரம் ஊராட்சிமன்ற தலைவர் முத்துகிருஷ்ணன், திமுக நிர்வாகி சித்தகண்ணி, அண்ணாதுரை, தொண்டரணி பாத்திமாபீவி, நாகுடி சுப. சின்னையா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# தமிழ்நாட்டில் சிறந்த தொண்டு நிறுவனம் விருதை ஈகோ–ஃப்ரீக் மாணவர்கள் அமைப்பு பெற்றது

சென்னை : பிப். 14-

சென்னை சாலிகிராமத்தில் தமிழ்நாடு தொண்டு நிறுவனங்களின் கூட்டமைப்பின் 5வது மாநில மாநாடு நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினர்களாக மேனாள் காவல்துறை தலைவர் பிரதீப். பி.பிலிப், முன்னாள் தமிழக அரசு செயலாளர் விஜயகுமார், உயர்நீதிமன்ற நீதியரசர் எஸ்.கே.கிருஷ்ணன், கூட்டமைப்பின் மாநில தலைவர் அசோக்குமார் மற்றும் நடிகை வடிவுக்கரசி முன்னிலையில் சேலத்தின் சிறந்த தொண்டு



நிறுவனம் என்ற விருதை தமிழ்நாட்டின் முதல் பள்ளி, கல்லூரி மாணவர்களால் தொடங்கப்பட்ட ஈகோ-ஃப்ரீக் மாணவர்கள் அமைப்பு பெற்றது. இதனை ஈகோ-ஃப்ரீக் அமைப்பின் நிறுவனரும், கூட்டமைப்பின் மாணவர் அணி மாநில தலைவர் வருண் ராஜன் பெற்றுக்கொண்டார். உடன் யோகேஷ், தாராகேஷ்வரன், கீர்த்திவாசன் மற்றும் 500க்கும் மேற்பட்ட பல்வேறு தொண்டு நிறுவனங்கள் கலந்து கொண்டனர்.

# நாடாளுமன்ற தேர்தல் கூட்டணி குறித்து முக்கிய முடிவு எடுப்பதற்காக பிப்ரவரி 16ல் டெல்லி செல்கிறார் அண்ணாமலை

*சென்னை : பிப். 14-*

*கூட்டணி குறித்து முக்கிய முடிவு எடுப்பதற்காக பிப்ரவரி 16ல் அண்ணாமலை டெல்லி செல்ல உள்ளார்.*

*தமிழ்நாட்டில் பாஜகவின் கூட்டணி வேகம் சரியாக சேரவில்லை என்ற கருத்து நிலவி வருகிறது. குறிப்பாக பாமக, தேமுதிகவை பாஜக கூட்டணியில் இணைக்க பலகட்ட முயற்சிகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் நாடாளுமன்ற தேர்தலை எதிர்கொள்ளும் வகையில் கூட்டணி அமையவில்லை என்று கூறப்படுகிறது.*



*அந்த வகையில் கூட்டணியில் இருக்கக்கூடிய சிக்கல்களை களைவதற்கு, பல்வேறு இட ஒதுக்கீடு பிரச்சனைகள் குறித்து பேசுவதற்காக பாஜக தலைவர் அண்ணாமலை டெல்லி செல்ல திட்டமிட்டிருப்பதாக கூறப்படுகிறது. மேலும் அவர் அமித்ஷா மற்றும் ஜே.பி நட்டாவை சந்திக்க நேரம் கேட்டிருப்பதாகவும் தகவல்வெளியாகியுள்ளது. குறிப்பாக 17, 18 ஆகிய இரண்டு நாட்களில் நடைபெறும் முக்கிய ஆலோசனையில் பாஜகவின் செயற்குழு நிர்வாகிகள், தேசிய தலைவர்கள் பங்கேற்கவுள்ளனர்.*

*இந்நிலையில் பாஜக தலைவர் அண்ணாமலை 16ம் தேதி மாலை டெல்லி புறப்பட்டு அன்று இரவே அமித்ஷா மற்றும் ஜே.பி நட்டாவை சந்திக்க திட்டமிட்டுள்ளதாகவும் அதே போல் இரண்டு நாள் நடைபெறும் கூட்டத்தில் பங்கேற்று நாடாளுமன்ற தேர்தலை எவ்வாறு எதிர்கொள்வது, கூட்டணி கட்சிகளின் பங்களிப்பு பாமக, தேமுதிகவை உள்ளிட்ட கட்சிகளை இணைப்பது குறித்து இந்த கூட்டத்தில் ஆலோசிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.*

# மத்திய அமைச்சர்களுடனான பேச்சுவார்த்தை தோல்வி பஞ்சாபில் இருந்து தொடங்கியது விவசாயிகளின் 'டெல்லி சலோ' பேரணி

புதுடெல்லி : பிப். 14-

மத்திய அமைச்சர்களுடன் 5மணிநேரத்துக்கும் அதிகமாக நடந்த பேச்சுவார்த்தை தோல்வியில் முடிந்ததைத் தொடர்ந்து பஞ்சாப்பின் ஃபதேகர் சாஹேப்பில் இருந்து விவசாயிகளின் டெல்லி சலோ பேரணி நேற்று தொடங்கியது.

சம்யுக்தா கிசான் மோர்ச்சா, கிசான் மஸ்தூர் மோர்ச்சா உள்ளிட்ட 200 விவசாய அமைப்புகள் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து பிப்.13 ம் தேதி டெல்லி நோக்கி செல்லும் போராட்டத்தில் ஈடுபட திட்டமிட்டிருந்தன. இந்தச் சூழலில், சண்டிகரில் மத்திய அமைச்சர்கள் மற்றும் விவசாயிகளுக்கு இடையிலான பேச்சுவார்த்தை நேற்று முன்தினம் திங்கள்கிழமை மாலை 5.30-க்கு தொடங்கி சுமார் 7 மணி நேரம் நீடித்தது. பேச்சுவார்த்தையில் உணவு மற்றும் நுகர்வோர் விவகாரத்துறை அமைச்சர் பியூஷ் கோயல், விவசாயத்துறை அமைச்சர் அர்ஜுன் முண்டா தலைமையில் விவசாய அமைப்பின் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தினர்.

இரவு 11 மணி அளவில், மின்சாரச்சட்டம் 2020, லக்கிம்பூர் கேரியில் கொல்லப்பட்ட விவசாயிகளின் குடும்பத்தினருக்கு இழப்பீடு தொகை, விவசாய அமைப்புகளைச் சேர்ந்த விவசாயிகளின் மீது உள்ள வழக்குகளை ரத்து செய்தல் போன்ற கோரிக்கைகள் தொர்டர்பாக இரண்டு தரப்புகளுக்குள் உடன்பாடு ஏற்பட்டது. என்றாலும், முக்கிய கோரிக்கைகளான அனைத்து பயிர்களுக்கும் குறைந்தபட்ச விலை நிர்ணயம் செய்வது தொடர்பாக சட்டம் இயற்றுதல், விவசாயிகளின் கடன் ரத்து, சுவாமிநான் கமிஷன் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவது போன்ற கோரிக்கைகளில்



எந்த உடன்பாடும் எட்டப்படவில்லை.

இதனால் நள்ளிரவுக்கு முன்பு பேச்சு வார்த்தை தோல்வியில் நிறைவடைந்தது. இதனைத் தொடர்ந்து "இந்த பேச்சுவார்த்தை நீண்ட நேரம் நடந்தது. எங்களது ஒவ்வொரு கோரிக்கை மீதும் விவாதம் நடந்தது. ஆனால், அவை வெறும் கோரிக்கைகள் அல்ல, அவை அனைத்தும் அரசின் வாக்குறுதிகள். அதனால் (பிப்.13) காலை 10 மணிக்கு திட்டமிட்டபடி டெல்லி நோக்கி செல்ல வேண்டும் என்பது என் கருத்து" என விவசாய சங்கத் தலைவர் ஜக்ஜித் சிங் தலேவால் தெரிவித்திருந்தார்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு எங்களின் பாதி கோரிக்கைகளை நிறைவேற்றுவதாக எழுத்துப்பூர்வமாக தெரிவித்திருந்தது. நாங்கள் இந்தப் பிரச்சினையை அமைதியான முறையில் முடிக்க விரும்புகிறோம். ஆனால் அரசு உண்மையாக இல்லை. அவர்கள் நேரத்தை வீணாக்கவே விரும்புகிறார்கள் என்று விவசாயிகள் பிரதிநிதி ஒருவர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இதனிடையே விவசாயிகளின் பேரணியைத் தடுக்கும் நோக்கில் டெல்லியை ஒட்டிய எல்லைப் பகுதிகளில் போலீஸ் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. சிங்கு, திக்ரி மற்றும் ஹாசிபூர் எல்லைப் பகுதிகளில் ஏராளமான போலீசார் நிறுத்திவைக்கப்பட்டுள்ளனர். நகரில் பொதுக்கூட்டங்கள் நடத்துவதற்கும், டிராக்டர்கள் நகருக்குள் நுழைவதற்கு ஒரு மாதகாலம் போலீஸார் தடைவிதித்துள்ளனர். இந்தப்பகுதிகளில் கூட்டம் கூடுவதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது. பெரும்பாலான சாலைகளில் காங்கிரீட், முள்வேலி தடுப்புகள் போடப்பட்டுள்ளன. வணிகப் பயன்பாட்டு வாகனங்கள் நகருக்குள் நுழைவதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது.

ஹரியாணா அரசும் அம்பாலா, ஜிந்த், ஃபதேகாபாத், குருஷேத்ரா, சிர்ஷா உள்ளிட்ட பஞ்சாப் மாநிலத்தை ஒட்டிய எல்லைகளில் பாதுகாப்பைப் பலப்படுத்தியுள்ளது. பேரணி நகருக்குள் நுழைவதை தடுக்கும் வகையில் சிமெண்ட் தடுப்புகள், இரும்பு ஆணிகள் மற்றும் முள்கம்பிகள் கொண்டு தடுப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. தனியார் மற்றும் அரசு சொத்துக்களுக்கு சேதம் ஏற்படுவதைத் தடுக்கும் வகையில் ஹரியாணா அரசு 2021ம் ஆண்டு சட்டத்தை அமல்படுத்தியுள்ளது. மாநில உள்துறை விதிகளை தீவிரமாக கடைபிடிக்கும் படி குடிமை மற்றும் காவல்துறை அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளது.

மத்திய அரசு கொண்டு வந்த புதிய 3 வேளாண் சட்டங்களை எதிர்த்து டெல்லி எல்லைகளில் ஏற்கெனவே விவசாயிகள் தொடர்ந்து போராட்டம் நடத்தினர். ஓராண்டுக்கு மேலாக அவர்கள் போராட்டம் நடத்தியதால், இந்த முறை அதுபோல் நடக்காமல் தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை அரசு எடுத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# தமிழகத்தில் குழந்தைத் திருமணங்களைத் தடுக்க பள்ளிகளில் பாலியல் கல்வி தேவை : அன்புமணி

சென்னை : பிப். 14, "குழந்தைத் திருமணத்தின் தீமைகள் குறித்து மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்துதல், பாலியல் கல்வியை அறிமுகம் செய்தல், குழந்தைத் திருமணம், குழந்தை மகப்பேறு ஆகியவை குறித்த பாடங்களை பள்ளிக் கல்வியில் அறிமுகம் செய்தல் ஆகியவற்றின் மூலமே குழந்தைத் திருமணங்களையும், குழந்தை மகப்பேறுகளையும் தடுக்க முடியும். இதை உணர்ந்து அதற்கான நடவடிக்கைகளை தமிழக அரசு மேற்கொள்ள வேண்டும்" என்று பாமக தலைவர் அன்புமணிராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில், "தமிழ்நாட்டின் பின்தங்கிய மாவட்டங்களில் ஒன்றான திருநெல்வேலியில் கடந்த 34 மாதங்களில் மட்டும், 18 வயது நிறைவடையாத குழந்தைகள் 1448 பேருக்கு மகப்பேறு நடைபெற்றிருப்பதாக வெளியாகியிருக்கும் செய்திகள் கவலையளிக்கின்றன. வளர்ச்சியடைந்த மாநிலமாகக் கருதப்படும் தமிழ்நாட்டில் குழந்தைத் திருமணங்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதையே இந்த புள்ளிவிவரங்கள் உறுதி செய்கின்றன.

திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த வெரோனிகா மேரி என்ற நலவாழ்வு செயல்பாட்டாளர் தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின்படி பெற்ற விவரங்களில், நெல்லை மாவட்டத்தில் 2021 ஜனவரி முதல் 2023 அக்டோபர் மாதம் வரையிலான 34 மாதங்களில் 1448 குழந்தை மகப்பேறுகள் நடைபெற்றிருப்பது தெரிய வந்துள்ளது. இவற்றில் மிக அதிகமாக நெல்லை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் 347 குழந்தை மகப்பேறுகளும், மேலப்பாளையம் ஆரம்ப சுகாதார நிலையம், மானூர் ஆரம்ப சுகாதார நிலையம் ஆகியவற்றில் முறையே 88, 44 குழந்தை மகப்பேறுகளும் நடைபெற்றுள்ளன என்று ஒரு தனியார் செய்தி நிறுவனம் செய்தி வெளியிட்டுள்ளது. குழந்தைகளே குழந்தைப் பெற்றுக்கொள்ளும் நடைமுறை நிச்சயமாக அதிர்ச்சியளிக்கும் ஒன்று தான். இதற்கான பின்னணி என்ன என்பதை கண்டு பிடித்து சரிசெய்ய வேண்டியது அரசின் கடமை.

நெல்லை மாவட்டத்துடன் ஒப்பிடும் பொது தருமபுரி, கிருஷ்ணகிரி, சேலம் மாவட்டங்களில் குழந்தைத் திருமணங்களும், அதன் விளைவாக குழந்தை மகப்பேறுகளும் அதிக எண்ணிக்கையில் நடைபெறுகின்றன.



தமிழ்நாட்டில் ஒவ்வொரு நாளும் சராசரியாக 10 குழந்தைத் திருமணங்கள், அதாவது ஆண்டுக்கு 3650 குழந்தைத் திருமணங்கள் நடப்பதாக தமிழக அரசின் சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. குழந்தைத் திருமணங்கள் தமிழ்நாட்டில் காலம் காலமாக நடைபெற்று வரும் சூழலில், அவற்றை கட்டுப்படுத்துவதில் அரசு ஓரளவு வெற்றி பெற்றிருக்கும் நிலையில், முழுமையாக தடுத்து நிறுத்துவதில் இன்னும் வெற்றி கிடைக்கவில்லை; தமிழ்நாடு அரசும் அதில் தீவிரம் காட்டவில்லை.

குழந்தைத் திருமணங்களை முழுமையாக தடுக்க வேண்டும் என்றால், அதற்கான காரணங்களை முதலில் கண்டறிய வேண்டும். குழந்தைத் திருமணங்கள் குறித்த விழிப்புணர்வு இல்லாமை, பெண் குழந்தைகள் பள்ளிப் படிப்பை பாதியில் நிறுத்துதல், புரிதல் இல்லாத காதல், குடும்பச் சூழ்நிலை, வேலைவாய்ப்பின்மை ஆகியவை தான் குழந்தைத் திருமணங்களுக்கான முக்கியக் காரணம் என்று சமூக செயற்பாட்டாளர்கள் கூறுகின்றனர்.

பள்ளிப் படிப்பை பாதியில் நிறுத்தும் சிறுமிகளுக்கு அவர்களின் பெற்றோர்கள் அவசர, அவசரமாக திருமணம் செய்து வைக்கின்றனர்; திருமணம் மற்றும் திருமணத்திற்கு பிந்தைய வாழ்க்கை குறித்த புரிதல் இல்லாமலேயே ஏற்படும் காதல் ஆகியவை தான் குழந்தைத் திருமணத்திற்கான முக்கியக் காரணங்கள் என்று சமூக செயல்பாட்டாளர்கள் தெரிவிக்கும் கருத்துகளை புறக்கணித்து விட முடியாது.

சேலம், தருமபுரி, கிருஷ்ணகிரி உள்ளிட்ட மாவட்டங்களில் நிலவும் வறுமையும், வேலைவாய்ப்பின்மையும் தான் குழந்தைத் திருமணங்களுக்கான முக்கியக் காரணம் ஆகும். இந்த மாவட்டங்களின் பெரும்பாலான பகுதிகளிலும் வாழும் பழங்குடியினரும், பிற சமுதாய மக்களும் பொருளாதாரத்தில் மிகமிக பின்தங்கியவர்களாக உள்ளனர்.

உள்ளூரில் அவர்களுக்கு போதிய வேலைவாய்ப்புகள் இல்லாத நிலையில், குடும்பத்தில் உள்ள தாயும், தந்தையும் வேலை தேடி வெளி மாவட்டங்களுக்கோ அல்லது வெளி மாநிலங்களுக்கோ செல்லும்போது தங்களின் பெண் குழந்தைகளை உடன் அழைத்துச் செல்வதோ அல்லது வீட்டில் தனித்து விட்டுச் செல்வதோ சாத்தியமில்லை. அதன் காரணமாகவே தங்களின் பெண் குழந்தைகளுக்கு இளம் வயதிலேயே திருமணம் செய்து வைத்து விட்டு, வேலைக்கு செல்கின்றனர்.

இந்த மாவட்டங்களில் உள்ளூர் அளவிலான வேலைவாய்ப்புகளை ஏற்படுத்தாமல் குழந்தைத் திருமணங்களைத் தடுப்பது குறித்து நினைத்துக் கூட பார்க்க முடியாது என்பதை அரசு உணர வேண்டும்.

குழந்தைத் திருமணத்தின் தீமைகள் குறித்து மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்துதல், பாலியல் கல்வியை அறிமுகம் செய்தல், குழந்தைத் திருமணம், குழந்தை மகப்பேறு ஆகியவை குறித்த பாடங்களை பள்ளிக் கல்வியில் அறிமுகம் செய்தல் ஆகியவற்றின் மூலமே குழந்தைத் திருமணங்களையும், குழந்தை மகப்பேறுகளையும் தடுக்க முடியும். இதை உணர்ந்து அதற்கான நடவடிக்கைகளை தமிழக அரசு மேற்கொள்ள வேண்டும்" என்று அன்புமணி ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

# எதிர்க்கட்சி துணைத் தலைவர் இருக்கை விவகாரம் சபாநாயகர் மறுபரிசிலனை செய்ய முதல்வர் ஸ்டாலின் பரிந்துரை

*சென்னை : பிப். 14-*

*எதிர்க்கட்சி துணைத் தலைவர் இருக்கை தொடர்பான இபிஎஸ் கோரிக்கையை மறுபரிசீலனை செய்து உரிய நடவடிக்கை எடுக்க சபாநாயகர் அப்பாவுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் பரிந்துரை செய்துள்ளார்.*

*தமிழக சட்டப்பேரவை கூட்டத்தொடர் நடந்து வருகிறது. ஆளுநர் உரை மீதான விவாதத்தின் போது எதிர்க்கட்சித் துணை தலைவர் இருக்கை தொடர்பாக பேச வேண்டும் என அதிமுக உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்தனர். எதிர்க்கட்சித் துணை தலைவர் இருக்கையில் ஓ.பன்னீர்செல்வம் உட்கார்வதற்கு எதிர்ப்பு தெரிவித்து, புதிதாக எதிர்க்கட்சித் துணை தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட ஆர்.பி.உதயகுமாருக்கு*



*இருக்கையை அளிக்க வேண்டும் என அதிமுக தொடர்ந்து கோரிக்கை வைத்து வருகிறது. அதன்படி, நேற்று அது குறித்துபேசவேண்டும்என அதிமுக உறுப்பினர்கள் சலசலப்பை ஏற்படுத்தினர். எதிர்க்கட்சித் தலைவர் பழனிசாமியும் அதே கோரிக்கையை முன்வைத்தார்.*

*அப்போது எழுந்து பேசிய முதல்வர் ஸ்டாலின், "அதிமுக சட்டப்பேரவை துணைத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உதயகுமாருக்கு இடம் ஒதுக்கி தருவது தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவர் பழனிசாமி தொடர்ந்து இந்த அவையில் பேசி வருகிறார். ஆனால், இது சபாநாயகருக்கு உள்ள உரிமை என்று இந்த விவகாரத்தில் பல முறை சபாநாயகர் அப்பாவு விளக்கம் அளித்துவிட்டார். இருந்தாலும் இந்த விவகாரத்தில் நான் கேட்டுக்கொள்வது, எதிர்க்கட்சித் தலைவர் கோரிக்கையை சபாநாயகர் மறுபரிசீலனை செய்து அதற்கு ஆவண செய்யுமாறு உரிமையோடு கேட்டுக் கொள்கிறேன்." என்று தெரிவித்தார்.*

*அதற்கு பதிலளித்த சபாநாயகர் அப்பாவு, "முதல்வர் பரிந்துரைபடி இந்த கோரிக்கை குறித்து மறுபரிசீலனை செய்து தக்க நடவடிக்கை எடுக்கப்படும்" என்றார்.*

PUDUGAI VARALARU - National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.

வரலாறு விளையாட்டு

# டென்னிஸ் வீரர் ரோகன் போபண்ணாவுக்கு ரூ.50 லட்சம் பரிசு – சித்தராமையா அறிவிப்பு



**பெங்களூரு : பிப். 14,**

**கர்நாடக முதல்-மந்திரி சித்தராமையா டென்னிஸ் வீரர் ரோகன் போபண்ணாவை நேரில் சந்தித்து வாழ்த்து தெரிவித்தார்.**

ஆஸ்திரேலியாவின் மெல்போர்ன் நகரில் நடைபெற்ற ஆஸ்திரேலிய ஓபன் கிராண்ட்ஸ்லாம் டென்னிஸ் தொடரின் ஆடவர் இரட்டையர் பிரிவு இறுதிச்சுற்றில், ரோகன் போபண்ணா-மேத்யூ எப்டென் இணை சாம்பியன் பட்டம் வென்றது. இதன் மூலம் அதிக வயதில் 'கிராண்ட்ஸ்லாம்' பட்டம் வென்ற வீரர் என்ற சாதனையை 43 வயது இந்திய வீரர் ரோகன் போபண்ணா படைத்தார்.

இதையடுத்து அவருக்கு தற்போது வாழ்த்துகள் குவிந்து வருகின்றன. இந்நிலையில் டென்னிஸ் வீரர் ரோகன் போபண்ணாவுக்கு ரூ.50 லட்சம் பரிசு வழங்கப்படும் என கர்நாடக மாநில முதல்-மந்திரி சித்தராமையா அறிவித்துள்ளார். முன்னதாக ரோகன் போபண்ணா மற்றும் அவரது குடும்பத்தினரை சித்தராமையா நேரில் சந்தித்து வாழ்த்து தெரிவித்தார். இந்த சந்திப்பின்போது கர்நாடக மந்திரிகள் பிரியங்க் கார்கே, சிவராஜ் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

# விளையாடி கொண்டிருந்த இந்தோனேசிய கால்பந்து வீரர் மின்னல் தாக்கி பலி



**மேற்கு ஜாவா : பிப். 14,**

**இந்தோனேஷியாவில் கால்பந்து போட்டிக்கு இடையே விளையாட்டு வீரர் ஒருவர் மின்னல் தாக்கி உயிரிழந்த சம்பவம் தொடர்பான வீடியோ காட்சிகள் வெளியாகி பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.**

மழைக்காலங்களில் போது மின்னல் தாக்கி பொதுமக்கள் உயிர் இழக்கும் சம்பவங்கள் உலகம் முழுவதும் தொடர்கின்றன. மின்னல் தாக்கும் சமயங்களில் வெட்டவெளிகளில் நிற்கக்கூடாது, மரங்களின் அடியே நிற்கக்கூடாது என்பது போன்ற முன்னெச்சரிக்கை தகவல்கள் தெரிவிக்கப்பட்டாலும், எதிர்பாராத விதமாக மின்னல் தாக்கி உயிர் இழக்கும் சம்பவங்கள் தவிர்க்க முடியாத ஒன்றாகவே இருந்து வருகிறது.

மிகவும் உயரமான கட்டிடங்களில் மின்னலை எதிர்கொள்வதற்காக லைட்னிங் ராட் எனப்படும் அமைப்புகள் அமைக்கப்பட்டுள்ளன. இருப்பினும் வெட்டவெளியில் இது போன்ற பாதுகாப்பு அம்சங்கள் இல்லை என்பதால் உயிரிழப்புகள் தவிர்க்க முடியாததாகி வருகிறது.

அந்த வகையில் இந்தோனேஷியாவில் மைதானம் ஒன்றில் விளையாடிக் கொண்டிருந்த கால்பந்து வீரர் மீது மின்னல் தாக்கிய சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இந்தோனேஷியாவின் மேற்கு ஜாவாவின் பாண்டுங் பகுதியில் சிலிவாங்கி என்கிற மைதானத்தில் பாண்டுங் மற்றும் சுபாங் அணிகளுக்கு இடையேயான நட்பு ரீதியான கால்பந்து போட்டி நடைபெற்றது. இரு அணி வீரர்களும் மைதானத்தில் விளையாடிக் கொண்டிருந்த போது, கருமேகங்கள் சூழ்ந்து மோசமான வானிலை நிலவிய நிலையில் மின்னல் தாக்கியுள்ளது.

அப்போது சுபாங் அணியைச் சேர்ந்த 35 வயது கால்பந்து வீரர் செப்டெய்ன் ரெஹர்ஜா என்பவர் மீது எதிர்பாராத விதமாக மின்னல் பாய்ந்தது. இதில் சம்பவ இடத்திலேயே மயங்கி விழுந்த அவரை, உடன் விளையாடிக் கொண்டிருந்த கால்பந்து வீரர்கள் மற்றும் மருத்துவக் குழுவினர் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றனர். ஆனால் அவர் செல்லும் வழியிலேயே பரிதாபமாக உயிரிழந்ததாக மருத்துவர்கள் தெரிவித்தனர், இந்த சம்பவம் சக விளையாட்டு வீரர்களிடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

மோசமான வானிலை காரணமாக வானத்தில் கருமேகங்கள் சூழ்ந்து இருந்த நிலையில், மைதானத்திலிருந்து 300 மீட்டர் உயரத்தில் மின்னல் தோன்றியதாகவும், இதனால் இந்த அசம்பாவித சம்பவம் நிகழ்ந்துள்ளதாகவும் வானிலை ஆய்வு மையம் விளக்கம் அளித்துள்ளது. இந்தோனேசியாவில் இதுபோன்ற சம்பவம் நடைபெறுவது இது முதல் முறை அல்ல. கடந்த ஆண்டு மைதானத்தில் கால்பந்து வீரர் ஒருவர் மீது மின்னல் தாக்கியதில், அவர் தீவிர சிகிச்சைக்கு பின்னர் உயிர் தப்பியது குறிப்பிடத்தக்கது.

# சிஎஸ்கே அணியின் பிராண்டு அம்பாசிடராக கத்ரீனா கைஃப் நியமனம்



**மும்பை : பிப். 14,**

**17-வது ஐ.பி.எல். டி20 கிரிக்கெட் லீக் வருகிற மார்ச் மற்றும் மே மாதங்களில் நடத்தப்படுகிறது. ஐ.பி.எல். போட்டியை மார்ச் 22-ந்தேதி தொடங்கி மே இறுதி வரை நடத்த ஐ.பி.எல். நிர்வாகம் திட்டமிட்டுள்ளது. ஆனால் உறுதியாக இன்னும் தேதி அறிவிக்கப்படவில்லை.**

இந்நிலையில் ஐபிஎல் சீசன் தொடங்குவதற்கு முன்னதாக சென்னை சூப்பர் கிங்ஸ் அணி குறித்த முக்கியமான தகவல்கள் அடுத்தடுத்து வெளிவருகின்றன. சமீபத்தில் சிஎஸ்கே அணி ஐக்கிய அரபு எமிரேட்ஸின் எதிஹாட் ஏர்வேஸ் நிறுவனத்தின் ஸ்பான்சர்ஷிப் உரிமையைப் பெற்றது. தற்போது மற்றொரு முக்கிய முடிவை எடுத்துள்ளது.

அது என்னவென்றால், அணியின் பிராண்டு அம்பாசிடராக பாலிவுட் நடிகை கத்ரீனா கைஃப் தேர்வு செய்யப்பட்டுள்ளார். எனவே எதிர்வரும் சீசனில் சிஎஸ்கே அணி வீரர்கள் பங்கேற்கும் அனைத்து விளம்பரங்களிலும் கத்ரினா கைப்பும் இடம் பெறுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதே போன்று போட்டிகளையும் நேரில் கண்டுகளித்து அணியை ஊக்கப்படுத்துவார் என்றும் எதிர்பார்க்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

# விசா பிரச்சினையால் ராஜ்கோட் விமான நிலையத்தில் இங்கிலாந்து வீரர் ரேகான் தடுத்து நிறுத்தம்



**ராஜ்கோட் : பிப். 14,**

**பென் ஸ்டோக்ஸ் தலைமையிலான இங்கிலாந்து கிரிக்கெட் அணி இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகிறது.**

இரு அணிகள் இடையேயான 5 போட்டிக்கொண்ட டெஸ்ட் தொடரில் 2 போட்டிகள் முடிவில் 1-1 என்ற நிலை இருக்கிறது. முதல் டெஸ்டில் இங்கிலாந்தும், 2-வது டெஸ்டில் இந்தியாவும் வெற்றி பெற்றன. 2-வது டெஸ்ட் கடந்த 3-ந்தேதி முடிவடைந்தது. 3-வது டெஸ்ட் குஜராத் மாநிலம் ராஜ்கோட்டில் நாளை தொடங்குகிறது. அடுத்த போட்டிக்கு 2 வாரங்கள் இருந்ததால் இங்கிலாந்து அணி 2-வது டெஸ்ட் முடிந்தவுடன் ஐக்கிய அரபு எமிரேட்சில் உள்ள அபுதாபிக்கு சென்றது.

அபுதாபியில் 10 தினங்களில் ஓய்வு எடுத்த பிறகு இங்கிலாந்து அணி நேற்று முன்தினம் திங்கள்கிழமை மாலை இந்தியா திரும்பியது. அபுதாபியில் இருந்து சிறப்பு விமானம் மூலம் இங்கிலாந்து வீரர்கள் ராஜ்கோட் வந்தனர். அப்போது இங்கிலாந்து அணியின் சுழற்பந்து வீரர் ரேகான் அகமது விமான நிலையத்தில் தடுத்து நிறுத்தப்பட்டார். விசா பிரச்சினையால் அவரிடம் விமான நிலையத்தின் குடியுரிமை அதிகாரங்கள் விசாரணை நடத்தினர்.

ரேகான் அகமது ஒற்றை நுழைவு விசா மட்டுமே வைத்திருந்ததால் தடுத்து நிறுத்தப்பட்டார். அவர் ஏற்கனவே இந்தியா வந்து சென்றிருந்தார். தற்போது 10 தினங்களுக்குள் மீண்டும் வந்ததால் விசா பிரச்சினையில் விசாரிக்கப்பட்டார். நிலமையின் தீவிரத்தை கருத்தில் கொண்டு உள்ளூர் அதிகாரிகள் அவருக்கு 2 நாள் விசா வழங்கினார்கள்.

இதுகுறித்து இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியத்தின் நிர்வாகி ஒருவர் கூறியதாவது:- அடுத்த 2 தினங்களுக்குள் விசாவை மீண்டும் செயல்படுத்த இங்கிலாந்து அணிக்கு அறிவுறுத்தப்பட்டு உள்ளது. ரேகான் அகமது மற்ற வீரர்களுடன் நுழைய அனுமதிக்கப்பட்டார். இங்கிலாந்து வீரர்கள் நேற்று முதல் பயிற்சியில் ஈடுபடுவார்கள் என்று அவர் கூறி உள்ளார். ஏற்கனவே இங்கிலாந்தை சேர்ந்த சோயிப் பஷீர் விசா பிரச்சினையில் சிக்கி இருந்தார். இதனால் அவரால் முதல் போட்டியில் ஆட முடியாமல் போனது.

# உருவக்கேலி செய்த நெட்டிசன்களுக்கு தக்க பதிலடி கொடுத்த பும்ரா மனைவி



**மும்பை : பிப். 14,**

**உருவக்கேலி செய்த வலைதளவாசிக்கு வேகப்பந்துவீச்சாளர் ஜஸ்ப்ரீத் பும்ரா மனைவி சஞ்சனா கணேசன் பதிலளித்த விதம் கவனம் ஈர்த்துள்ளது.**

இந்திய கிரிக்கெட் அணிக்காக டெஸ்ட், ஒருநாள் மற்றும் டி20 கிரிக்கெட் என மொத்தம் 165 சர்வதேச போட்டிகளில் பும்ரா விளையாடி உள்ளார். மொத்தமாக 323 விக்கெட்களை கைப்பற்றியுள்ளார். அண்மையில் காயத்தில் இருந்து மீண்ட அவர், இந்திய அணியில் கம்பேக் கொடுத்தார். 29 வயதான இந்திய அணியின் வேகப்பந்து வீச்சாளர் பும்ரா, கடந்த 2021-ல் தொலைக்காட்சி தொகுப்பாளரான சஞ்சனா கணேசனை காதலித்து திருமணம் செய்து கொண்டார். கடந்த சில மாதங்களுக்கு முன்புதான் இந்த தம்பதிக்கு ஆண் குழந்தை பிறந்தது.

இதனிடையே, காதலர் தினம் வருவதை முன்னிட்டு விளம்பர வீடியோ ஒன்றை பும்ரா - சஞ்சனா கணேசன் தம்பதி தங்களது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் பதிவிட்டனர். குழந்தை பெற்ற பின் சஞ்சனா பொதுவெளியில் வெளியிடும் பதிவு இதுவாகும். குழந்தை பெற்றதால் விளம்பர வீடியோவில் சற்று எடைகூடி இருந்தார் சஞ்சனா. இதனை குறிப்பிட்டு வலைதளவாசி ஒருவர் சஞ்சனாவை உருவக்கேலி செய்திருந்தார்.

அந்த நபருக்கு பதிலடி கொடுக்கும் வகையில் அந்தப் பதிவுக்கு கீழ், "உன் பள்ளியில் கொடுக்கப்படும் அறிவியல் பாடப்புத்தகத்தில் என்ன இருக்கிறது என்று கேட்டால் சொல்லத் தெரியாது. ஆனால் பெண்களின் உடல் வடிவம் பற்றி இங்கு பேசுகிறாய். அமைதியாக இங்கிருந்து சென்றுவிடு" என்று காட்டமாக பதில் அளித்திருந்தார் சஞ்சனா. அவரின் இந்தப் பதிலடி தற்போது கவனம் ஈர்த்து வருகிறது.

# ஜூனியர் வீரர்கள் விரைவில் இந்திய அணியில் இடம் பிடிப்பார்கள் – பயிற்சியாளர் நம்பிக்கை



**பெனோனி : பிப். 14,**

**தென் ஆப்பிரிக்காவில் நடந்த ஜூனியர் உலக கோப்பை கிரிக்கெட் (19 வயதுக்குட்பட்டோர்) இறுதி ஆட்டத்தில் நடப்பு சாம்பியனான இந்திய அணி 79 ரன்கள் வித்தியாசத்தில் ஆஸ்திரேலியாவிடம் தோல்வியை தழுவியது.**

இறுதி சுற்றுக்கு முன்பு வரை எல்லா ஆட்டங்களிலும் பிரமாதமாக விளையாடி வெற்றிகளை குவித்த இந்தியா கிளைமாக்சில் கோட்டை விட்டு விட்டது. என்றாலும் கேப்டன் உதய் சாஹரன் (ஒரு சதம், 3 அரைசதம் உள்பட 397 ரன்), முஷீர் கான் (2 சதம் உள்பட 360 ரன்) சச்சின் தாஸ் (303 ரன்), சுழற்பந்து வீச்சாளர் சாமி பாண்டே (18 விக்கெட்) உள்ளிட்டோரின் செயல்பாடு பாராட்டும்படி இருந்தது.

இந்த நிலையில் தோல்விக்கு பிறகு இந்திய ஜூனியர் அணியின் தலைமை பயிற்சியாளர் ரிஷிகேஷ் கனித்கர் அளித்த பேட்டியில், 'இறுதி ஆட்டத்தில் சிறந்த செயல்பாட்டை வெளிப்படுத்துவதை எதிர்நோக்கி இருந்தோம். துரதிர்ஷ்டவசமாக அது நடக்கவில்லை. ஆஸ்திரேலியா பேட்டிங், பந்து வீச்சு, பீல்டிங் மூன்றிலும் அசத்தியதால் வெற்றியாளராக இருக்கிறது. டாஸ் ஒரு பிரச்சினை இல்லை. ஏனெனில் ஆடுகளத்தன்மை நன்றாகவே இருந்தது. பேட்டிங்கில் நாங்கள் இன்னும் அதிகமாக போராடி இருக்கலாம்' என்றார்.

மேலும் கனித்கர் கூறுகையில், 'கிரிக்கெட்டில் இந்தியாவின் எதிர்காலம் பிரகாசமாக உள்ளது. இந்த உலகக் கோப்பையில் பந்து வீச்சிலும் சரி, பேட்டிங்கிலும் சரி சில இந்திய வீரர்கள் தனித்துவமான திறமையை வெளிக்காட்டி கவனத்தை ஈர்த்தனர். கடினமான சூழலில் அவர்கள் வெளிப்படுத்திய முதிர்ச்சியமான ஆட்டம், இந்திய கிரிக்கெட்டுக்கு நல்ல அறிகுறியாகும். ஒவ்வொரு ஜூனியர் உலகக் கோப்பை போட்டி முடிவிலும் சில வீரர்கள் ஐ.பி.எல். அல்லது இந்திய அணிக்குள் நுழைவார்கள். நிச்சயம் இரு வீரருக்காவது இந்திய சீனியர் அணியில் வாய்ப்பு கிடைக்கும் என்று நம்புகிறேன்.

ஆனால் தாயகம் திரும்பியதும் அதற்குரிய மிகச்சிறந்த போட்டி காத்திருக்கிறது. அடுத்து என்ன செய்ய வேண்டும்? எப்படி தொடர்ந்து முன்னெடுத்து செல்வது?, உயரிய கிரிக்கெட் போட்டிக்கு தங்களை எப்படி தயார்படுத்துவது? என்பதை இந்த தொடரில் இருந்து கற்றுள்ளனர்' என்றார்.

விராட் கோலி, யுவராஜ்சிங், முகமது கைப், சுரேஷ் ரெய்னா, ஷிகர் தவான், ரோகித் சர்மா, ரவீந்திர ஜடேஜா, லோகேஷ் ராகுல், ரிஷப் பண்ட், சுப்மன் கில், ஜெய்ஸ்வால் உள்ளிட்டோர் ஜூனியர் உலகக் கோப்பையில் சிறப்பாக விளையாடி தான் இந்திய அணிக்குள் கால்பதித்தனர் என்பது நினைவு கூரத்தக்கது.

வரலாறு சினிமா

# "தென்னிந்திய சினிமாவில் நேர்த்தி இருக்கிறது" நடிகர் இம்ரான் ஹாஸ்மி புகழாரம்



**மும்பை : பிப். 14,**

**தென்னிந்திய திரைப்படங்களில் ஒரு நேர்த்தி இருக்கிறது. தென்னிந்திய இயக்குநர்கள் தங்கள் படங்களுக்காக செலவழிக்கும் ஒவ்வொரு பைசாவும் திரையில் தெரிகிறது" என்று பாலிவுட் நடிகர் இம்ரான் ஹாஸ்மி புகழாரம் சூட்டியுள்ளார்.**

சுஜீத் இயக்கத்தில் பவன் கல்யாண் நடிக்கும் படம் 'ஓஜி'. இதில் இம்ரான் ஹாஸ்மி வில்லனாக நடிக்கிறார். இது அவர் நடிக்கும் முதல் தென்னிந்தியப் படம் ஆகும். இது குறித்து சமீபத்திய பேட்டி ஒன்றில் பேசிய அவர், "தென்னிந்திய சினிமா துறையில் நான் ஒரு படத்தில் நடிப்பேன் என்று கற்பனை கூட செய்ததில்லை. சுஜீத் மிகச் சிறந்த இயக்குநர். படத்தில் என்னுடைய கதாபாத்திரம் சிறப்பாக எழுதப்பட்டுள்ளது.

தென்னிந்திய இயக்குநர்கள் நம்மை (பாலிவுட்) விட மிக நேர்த்தியானவர்கள் என்று நினைக்கிறேன். அவர்கள் தங்கள் படங்களுக்காக செலவழிக்கும் ஒவ்வொரு பைசாவும் திரையில் தெரிகிறது. இந்தி சினிமாவில் தேவையற்ற விஷயங்களுக்காக பணம் வீணடிக்கப்படுகிறது. இதனால் அவை திரையில் தெரிவதில்லை.

விசுவல் எஃபெக்ட்ஸ் என்று வரும்போது தென்னிந்திய சினிமாவில் ஒரு நேர்த்தி இருக்கிறது. தென்னிந்தியத் திரைப்படங்கள் மற்றும் இயக்குநர்களிடம் இருந்து இந்தி சினிமா கற்றுக் கொள்ள நிறைய இருக்கிறது" என்று கூறினார்.

# அந்தரங்க காட்சிகளில் ராம்சரண் நடிப்பது சங்கடமாக உள்ளது



**ஹைதராபத் : பிப். 14,**

**தெலுங்கு சினிமா சூப்பர் ஸ்டாரான சிரஞ்சீவியின் மகன் ராம்சரண். தெலுங்கில் ஏராளமான படங்களில் நடித்து முன்னணி நடிகராக இருக்கிறார். இவரது நடிப்பில் வெளியான ஆர்.ஆர்.ஆர். படம் திரைக்கு வந்து பெரிய வெற்றியை பெற்றதுடன் அதில் இடம் பெற்ற நாட்டு நாட்டு பாடல் ஆஸ்கார் விருதையும் வென்றது.**

ராம்சரணுக்கும் அப்பல்லோ மருத்துவமனை குழுமத்தின் தலைவரான பிரதாப்ஜி ரெட்டியின் பேத்தியான உபாசனா காமினேனிக்கும் கடந்த 2012-ம் ஆண்டு திருமணம் நடந்தது. திருமணம் ஆகி 11 ஆண்டுகளுக்கு பிறகு இவர்களுக்கு அழகான பெண் குழந்தை பிறந்தது. பல ஆண்டுகளுக்கு பிறகு குழந்தை பிறந்ததால் சிரஞ்சீவி குடும்பமே கொண்டாடி மகிழ்ந்தது.

இந்நிலையில் உபாசனா தனது கணவர் ராம்சரண் பற்றி மனம் திறந்து அளித்த பேட்டியில் கூறியதாவது:- என் கணவர் ராம்சரண் மற்ற நடிகைகளுடன் அந்தரங்க காட்சியில் நடிக்கும் போது நான் மிகவும் சங்கடமாக உணர்ந்தேன். ஏன் என்றால் நான் சினிமா பின்னணி இல்லாத குடும்பத்தில் இருந்து வந்தவள். எனவே அது எனக்கு மிகவும் கஷ்டமாக இருந்தது.

கதாநாயகிகளுடன் இப்படி நடித்துதான் ஆக வேண்டுமா? என்று பல முறை அவரிடம் கேட்டுள்ளேன். அதற்கு ராம்சரண் இது எனது தொழில். இப்படித்தான் இருக்கும் என எனக்கு புரிய வைத்தார். இப்போதெல்லாம் சரியாகிவிட்டது. ஆரம்பத்தில் எனக்கு புரியவில்லை. நாங்கள் இருவரும் வெவ்வேறு உலகில் வாழ்ந்து வந்தோம். என்னை புரிந்து கொண்டு எனக்காக அனைத்தையும் புரிய வைத்து அவர் என்னை விட சிறந்தவராக இருக்கிறார். மேலும் குழந்தை வளர்ப்பில் நாங்கள் இருவரும் முக்கிய பங்கு வகிக்கிறோம் என்று கூறினார்.

# வெற்றி துரைசாமி குடும்பத்தினருக்கு நடிகர் அஜித் நேரில் ஆறுதல்



**சென்னை : பிப். 14,**

**வெற்றி துரைசாமி மறைவையொட்டி அவரது குடும்பத்தினருக்கு நடிகர் அஜித் நேரில் சென்று ஆறுதல் தெரிவித்தார்.**

சென்னை மாநகராட்சி முன்னாள் மேயர் சைதை துரைசாமியின் மகன் வெற்றி (45), விலங்குகளைப் படம் எடுப்பதற்காக, தனது நண்பர் கோபிநாத்துடன் இமாச்சல பிரதேசத்துக்கு சென்றார். கடந்த 4-ம் தேதி மாலை கசாங்நளா பகுதியில் காரில் சென்று கொண்டிருந்தபோது, கார் கட்டுப்பாட்டை இழந்து, சாலையை ஒட்டி இருந்த சட்லெஜ் ஆற்றில் கவிழ்ந்துள்ளது. 9 நாளாக வெற்றி துரைசாமியின் உடல் தேடப்பட்டு வந்த நிலையில், விபத்து நிகழ்ந்த இடத்தில் இருந்து இரண்டு கி.மீட்டர் தொலைவில், அவரது உடல் நேற்று முன்தினம் திங்கள்கிழமை மீட்கப்பட்டது.

வெற்றி துரைசாமியின் உடல் நேற்று சென்னை கொண்டுவரப்பட்டது. அவரது மறைவுக்கு அரசியல் கட்சியை சேர்ந்தவர்கள், திரை பிரபலங்கள் பலரும் இரங்கல் தெரிவித்து வருகின்றனர். வெற்றி துரைசாமியின் நெருங்கிய நண்பரான நடிகர் அஜித்குமார் தனது மனைவி ஷாலினியுடன் வெற்றி துரைசாமியின் வீட்டுக்கு நேரில் சென்று அவரது குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்தார். சென்னை கொண்டுவரப்பட்ட வெற்றி துரைசாமியிடன் உடல் இறுதிச் சடங்குகளுக்குப் பிறகு நேற்று மாலை கண்ணம்மாபேட்டை மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

# ஹீரோவாகும் விஷ்ணு விஷாலின் தம்பி



**சென்னை : பிப். 14,**

**விஷ்ணு விஷால் தனது தம்பி ருத்ராவை தமிழ் சினிமாவில் ஹீரோவாக அறிமுகப்படுத்துகிறார்.**

ருத்ரா நடிக்கும் புதிய படத்தை அறிமுக இயக்குனர் கிருஷ்ணகுமார் ராம்குமார் இயக்குகிறார். இந்த படத்திற்கு 'ஓஹோ எந்தன் பேபி' என்று தலைப்பு வைக்கப்பட்டுள்ளது. தர்புகா சிவா படத்திற்கு இசையமைக்கிறார். அதே சமயம் இந்த படத்தை விஷ்ணு விஷால், ரோமியோ பிக்சர்ஸ் ராகுல், மற்றும் டி கம்பெனி கே.வி.துரை ஆகியோருடன் இணைந்து தயாரிக்கிறார்.

இதில் ஹீரோயினாக பாலிவுட் நடிகை மிதிலா பால்கர் நடிக்கிறார். டேனி ரேமண்ட் ஒளிப்பதிவு செய்கிறார். பிரணவ் ஆர். எடிட்டிங் செய்கிறார். விஷ்ணு விஷால் ஸ்டுடியோஸ் நிறுவனத்தில் தயாரிப்பு நிர்வாக பணிகளிலும் கிரியேட்டிவ் டீமிலும் ருத்ரா பணியாற்றியுள்ளார். ஹீரோயின் மிதிலா பால்கர், கார்வான், திரியங்கா உள்ளிட்ட இந்தி படங்களில் நடித்துள்ளார். மாடர்ன் லவ் வெப்சீரிஸில் கண்ணுலே ஹார்ட் இருக்குற எமோஜி எபிஸோடை இயக்கிய கிருஷ்ணகுமார் ராம்குமார்தான் இந்த படத்தை இயக்குபவர்.

வரலாறு உலகம்

## ஈரான் நோக்கி சென்றுகொண்டிருந்த சரக்கு கப்பல் மீது ஹவுதி கிளர்ச்சியாளர்கள் தாக்குதல்



**சனா : பிப். 14,**

**ஈரான் நோக்கி சென்றுகொண்டிருந்த சரக்கு கப்பல் மீது ஹவுதி கிளர்ச்சியாளர்கள் தாக்குதல் நடத்தியுள்ளனர்.**

இஸ்ரேல் மீது ஹமாஸ் ஆயுதக்குழுவினர் கடந்த ஆண்டு அக்டோபர் 7ம் தேதி பயங்கரவாத தாக்குதல் நடத்தினர். இதற்கு பதிலடியாகஹமாஸ்மீதுபோர் அறிவித்த இஸ்ரேல், காசா முனையில் தாக்குதல் நடத்தி வருகிறது. இஸ்ரேலுக்கும், ஹமாஸ் ஆயுதக்குழுவுக்கும் இடையேயான போர் 3 மாதங்களுக்கு மேல் நீடித்து வருகிறது.

இந்த போரில் ஹமாஸ் ஆயுதக்குழுவுக்கு ஏமனில் செயல்பட்டு வரும் ஹவுதி கிளர்ச்சியாளர்கள் குழு ஆதரவு அளித்து வருகிறது. மேலும், செங்கடல் வழியாக இஸ்ரேல் மற்றும் இஸ்ரேலின் ஆதரவு நாடுகளுக்கு செல்லும் சரக்கு கப்பல்களை குறிவைத்து ஹவுதி கிளர்ச்சியாளர்கள் தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

இந்த தாக்குதலுக்கு பதிலடியாக, ஏமனில் உள்ள ஹவுதி கிளர்ச்சியாளர்களின் நிலைகளை குறிவைத்து அமெரிக்கா மற்றும் இங்கிலாந்து ஆகிய நாடுகள் வான்வழி தாக்குதல் நடத்தி வருகிறது. இந்த தாக்குதலால் மத்திய கிழக்கு பகுதியில் பதற்றமான சூழ்நிலை நிலவி வருகிறது.

இந்நிலையில், செங்கடலில் ஈரான் நோக்கி சென்றுகொண்டிருந்த சரக்கு கப்பல் மீது ஹவுதி கிளர்ச்சியாளர்கள் நேற்று தாக்குதல் நடத்தியுள்ளனர். கிரீஸ் நாட்டுக்கு சொந்தமான கப்பல் பிரேசிலில் இருந்து சோளம் உள்ளிட்ட சரக்குகளை ஏற்றிக்கொண்டு ஈரான் நோக்கி சென்றுகொண்டிருந்தது. அந்த கப்பலை குறிவைத்து ஹவுதி கிளர்ச்சியாளர்கள் தாக்குதல் நடத்தினர். இந்த தாக்குதலில் கப்பலுக்கு சிறிய அளவில் சேதம் ஏற்பட்டுள்ளதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

## ஏமனில் கண்ணிவெடியில் சிக்கி 3 குழந்தைகள் பலி : 4 பேர் காயம்



**ஏடன் : பிப். 14,**

**கூடாரங்களுக்கு வெளியே விளையாடிக் கொண்டிருந்த குழந்தைகள் தெரியாமல் கண்ணிவெடியில் மிதித்தபோது வெடித்துள்ளதாக அதிகாரி ஒருவர் கூறினார்.**

ஏமன் நாட்டில் 2014-ம் ஆண்டு முதல் உள்நாட்டு போர் நடந்து வருகிறது. சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட அரசுக்கு எதிராக கிளர்ச்சியாளர்கள் வன்முறையில் ஈடுபட்டு வருகின்றனர். இதனை தொடர்ந்து, ஏமன் அரசுக்கு ஆதரவாக, சவுதி அரேபியா தலைமையிலான கூட்டணி நாடுகள் செயல்பட்டு வருகின்றன.

ஏமன் நாட்டின் தெற்கே லாஜ் மாகாணத்தில் புலம்பெயர்ந்த அகதிகள் முகாம்கள் உள்ளன. இதில், போரால் பாதிக்கப்பட்டு தப்பி வந்த நூற்றுக்கணக்கான குடும்பத்தினர் தங்கியுள்ளனர். இந்த நிலையில், அந்த பகுதியில் திடீரென கண்ணிவெடி ஒன்று வெடித்ததில் 3 குழந்தைகள் பலியாகி உள்ளனர். 4 பேர் காயமடைந்தனர். கூடாரங்களுக்கு வெளியே விளையாடி கொண்டிருந்த அந்தகுழந்தைகள்,மண்ணில் புதைக்கப்பட்டிருந்த கண்ணிவெடியை தெரியாமல் மிதித்ததால் வெடித்ததாக அதிகாரி ஒருவர் கூறினார்.

2018-ம் ஆண்டு முதல் சவுதி அரேபியா தலைமையில் மசாம் என்ற திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன்படி, ஹவுதி கிளர்ச்சியாளர்கள் பல்வேறு மாகாணங்களில் வைத்த 4.31 லட்சம் கண்ணிவெடிகள் இதுவரை அகற்றப்பட்டு உள்ளன. கடந்த 3 முதல் 9 வரையிலான தேதிகளில் 784 கண்ணிவெடிகள் அகற்றப்பட்டு உள்ளன. கண்ணிவெடிகளால் மக்களில் பலர் உயிரிழந்தும், பாதிக்கப்பட்டும் உள்ளனர். பொதுமக்களுக்கான நல உதவிகள் சென்று சேர்வதும் தடுக்கப்படுகிறது. இதனை தொடர்ந்து, அவற்றை நீக்கும் பணிகள் பரவலாக நடந்து வருகின்றன.

## நேபாளத்தில் முதன்முறையாக அதிகாரப்பூர்வமாக திருமணத்தைப் பதிவுசெய்த லெஸ்பியன் ஜோடி



**நேபாளம் : பிப். 14,**

**நேபாளத்தில் அதிகாரப்பூர்வமாக திருமணத்தைப் பதிவுசெய்த முதல் லெஸ்பியன் ஜோடி என்ற பெயரை, அஞ்சு தேவி ஸ்ரேஸ்தா - சுப்ரிதா குருங் ஆகியோர் பெற்றுள்ளனர்.**

மேற்கு நேபாளத்தில் உள்ள பர்டியா மாவட்டத்தைச் சேர்ந்தவர் அஞ்சு தேவி ஸ்ரேஸ்தா. இவரது புனைபெயர் திப்தி. சியாங்ஜா மாவட்டத்தைச் சேர்ந்தவர் சுப்ரிதா குருங். இவர்கள் இருவரும் கடந்த 11ஆம் தேதி பர்டியா மாவட்டத்தின் ஜமுனா கிராமப்புற நகராட்சியில் தங்கள் திருமணத்தை முறைப்படி பதிவுசெய்துள்ளனர். இதையடுத்து அவர்களுக்கு உடனே திருமணப் பதிவுச் சான்றிதழும் வழங்கப்பட்டது.

இது குறித்து தன்பாலினசேர்க்கை ஆர்வலரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சுனில் பாபு பாண்டா, ‘தெற்காசியாவிலேயே முதல்முறையாக அதிகாரப்பூர்வமாக தங்கள் திருமணத்திற்காக பதிவு செய்த லெஸ்பியன் ஜோடி இவர்கள்தான்’ எனத் தெரிவித்துள்ளார். இதன் மூலம், தெற்காசியாவிலேயே ஒரேபாலின திருமணத்தை முறையாக பதிவுசெய்த முதல் நாடாக நேபாளம் வரலாற்றில் இடம்பிடித்துள்ளது.

இதற்குமுன்பு, கடந்த ஆண்டு நேபாளத்தில் மாயா குருங் (வயது 35) என்ற திருநங்கைக்கும், சுரேந்திர பாண்டே (வயது 27) என்ற சமபாலின சேர்க்கையாளருக்கும் இடையே சட்டப்பூர்வமாக நடைபெற்றதிருமணத்தைப் பதிவுசெய்ய அதிகாரிகள் மறுத்துவிட்டனர்.

அதாவது, நேபாளத்தில் தன் பாலினத் திருமணங்களுக்கு அந்த நாட்டு உச்சநீதிமன்றம், கடந்த 2007ஆம் அனுமதி அளித்திருந்தது. இதையடுத்து 2015ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட புதிய அரசமைப்பு சட்டத்திலும் பாலினத் தேர்வின் அடிப்படையில் மக்களிடையே பாகுபாடு காட்டக்கூடாது என்று திட்டவட்டமாகத் தெரிவித்திருந்தது. இந்தச் சூழலில் நேபாளத்தில் மாயா குருங் மற்றும் சுரேந்திர பாண்டே ஆகியோரது திருமணத்தைப் பதிவுசெய்ய அதிகாரிகள் மறுத்துவிட்டனர்.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்து அவர்கள் உச்சநீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்தனர். இது தொடர்பான மனுக்களை விசாரித்த உச்சநீதிமன்றம், கடந்த ஜூன் 27 அன்று தன் பாலினத் திருமணங்களுக்கு சட்ட அங்கீகாரம் அளித்து இடைக்கால உத்தரவு பிறப்பித்தது. ஆனால், ஒரினச்சேர்க்கை திருமணத்தை தற்காலிகமாக பதிவு செய்வதற்கான வரலாற்று உத்தரவு இருந்தபோதிலும், காத்மாண்டு மாவட்ட நீதிமன்றம் 4 மாதங்களுக்கு முன்பு தேவையான சட்டங்கள் இல்லாததைக் காரணம் காட்டி இந்த நடவடிக்கையை நிராகரித்தது. அந்த சமயத்தில் சுரேந்திர பாண்டே மற்றும் மாயாவின் திருமண விண்ணப்ப பதிவு நிராகரிக்கப்பட்டது. இதன்பின், உச்சநீதிமன்றம் தன்பாலினத் திருமணங்கள் பதிவு செய்ய சட்ட அங்கீகாரம் அளித்து உத்தரவு பிறப்பித்தது. இந்த உத்தரவு வந்து 5 மாதங்கள் ஆன நிலையில், மாயா குருங் - சுரேந்திர பாண்டே திருமணம் அதிகாரப்பூர்வமாக பதிவுசெய்யப்பட்டது.

## எதிர்க்கட்சி வரிசையில் அமர்வோம் இம்ரான் கட்சி அறிவிப்பு



**இஸ்லாமாபாத் : பிப். 14,**

**புதியநாடாளுமன்றத்தில் ஒரு பொறுப்பான எதிர்க்கட்சியாக பி.டி.ஐ. செயல்படும் என இம்ரான் கட்சி அறிவித்துள்ளது.**

பாகிஸ்தானில் ஆட்சி அமைப்பதற்கு 133 எம்.பி.க்களின் ஆதரவு தேவை. ஆனால் தேர்தலில் எந்த கட்சிக்கும் இந்த பெரும்பான்மை பலம் கிடைக்காததால் புதிய அரசு அமைப்பதில் சிக்கல் ஏற்பட்டு உள்ளது. எனவே கூட்டணி அரசு அமைப்பதற்கான பணிகளை அரசியல் கட்சிகள் தொடங்கி உள்ளன.

பாகிஸ்தானில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற நாடாளுமன்ற தேர்தலில் அதிக இடங்களைக் (101) இடங்களில் கைப்பற்றியிருந்தாலும், நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சி வரிசையில் அமர முடிவு செய்துள்ளதாக முன்னாள் பிரதமர் இம்ரான் கானின் தெஹ்ரீக்-ஏ-இன்சாப் (பி.டி.ஐ.) கட்சி அறிவித்துள்ளது.

இது குறித்து அந்தக் கட்சியின் மூத்த தலைவர் கோஹர் அலி கான் கூறியதாவது: பாகிஸ்தான் முஸ்லிம் லீக்-நவாஸ் (பிஎம்எல்-என்), பாகிஸ்தான் மக்கள் கட்சி (பி.பி.பி.) ஆகிய இரு கட்சிகளுடனும் எங்களுக்கு கொள்கை முரண் உள்ளது. எனவே, இதில் எந்தக் கட்சியுடனும் இணைந்து ஆட்சியமைக்கமாட்டோம். அதைவிட, நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்துவிடலாம் என்று முடிவுசெய்துள்ளோம். புதிய நாடாளுமன்றத்தில் ஒரு பொறுப்பான எதிர்க்கட்சியாக பி.டி.ஐ. செயல்படும் என்றார்.

## பாகிஸ்தானில் அமையும் எந்த அரசுடனும் இணைந்து பணியாற்ற தயார் : அமெரிக்கா



**இஸ்லாமாபாத் : பிப். 14,**

**பாகிஸ்தானில் கடந்த வாரம் பொதுத்தேர்தல் நடைபெற்றது. இந்த தேர்தலில் இம்ரான் கான், நவாஸ் ஷெரீப், பிலாவல் பூட்டோ ஆகியோர் கட்சிகளுக்கு தனிப்பெரும்பான்மை கிடைக்கவில்லை. இதனால் ஆட்சி அமைப்பதில் இழுபறி நிலவி வருகிறது.**

பாகிஸ்தானை காப்பாற்ற நவாஸ் ஷெரீப் - பிலாவல் பூட்டோ ஆகியோர் இணைந்து கூட்டணி ஆட்சி அமைக்க முடிவு செய்துள்ளனர். இதுகுறித்து இரு கட்சிகள் இடையே பேச்சுவார்த்தை நடைபெற்று வருகிறது. இதற்கிடையே தனிப்பட்ட முறையில் நாங்கள்தான் அதிக இடம் பெற்றுள்ளோம். அதனால் எங்களைத்தான் ஆட்சி அமைக்க அழைப்பார்கள் என இம்ரான் கான் கட்சி தெரிவித்து வருகிறது.

இதனால் இரண்டு பக்கத்தில் இருந்தும் வெற்றி பெற்றவர்களை இழுப்பதற்கான குதிரைபேரம் நடைபெற வாய்ப்புள்ளதாக கருதப்படுகிறது. இந்த நிலையில் எந்த அரசு அமைந்தாலும் அதனுடன் இணைந்து பணியாற்ற தயாராக உள்ளோம் என அமெரிக்கா தெரிவித்துள்ளது.

தேர்தலின்போது முறைகேடு நடைபெற்றதாக வந்த புகாரின் அடிப்படையில் விசாரணை நடத்தப்பட வேண்டும் என அமெரிக்கா வலியுறுத்தி இருந்தது குறிப்பிடத்தக்கது. மொத்தமுள்ள 264 இடங்களில் ஆட்சியை பிடிக்க 133 இடங்கள் தேவை. தனிப்பட்ட கட்சி அளவில் எடுத்துக் கொண்டால் இம்ரான் கான் கட்சி அதிக இடங்களை பிடித்துள்ளது. நாவஸ் ஷெரீப் மற்றும் பிலாவல் பூட்டோ கட்சியை தவிர்த்து மற்ற கட்சிகளுடன் சேர்த்து பார்த்தால் இம்ரான் கானுக்கு சரியாக 135 இடங்கள் வரும். இது ஆட்சி அமைக்க போதுமானது.

நவாஸ் ஷெரீப் பிலாவல் பூட்டோ கட்சியுடன் இணைந்து கூட்டணி ஆட்சி அமைக்க முடிவு செய்துள்ளார். இவர்களுக்கு (75+54) 129 இடங்கள் உள்ளன. இன்னும் 4 உறுப்பினர்கள் ஆதரவு தேவை. சுயேட்சை வேட்பாளர்களை இழுக்க வாய்ப்புள்ளது. அல்லது சிறிய கட்சிகளை இணைத்துக் கொள்ளலாம்.

## பிறப்பு விகிதத்தை அதிகரிக்க ஊழியர்கள் குழந்தை பெற்றால் ரூ. 62 லட்சம் நிதியுதவி : தென் கொரிய நிறுவனத்தின் புதிய திட்டம்



**சியோல் : பிப். 14,**

**தென் கொரியாவில் உள்ள கட்டுமான நிறுவனம் ஒன்று தனது ஊழியர்கள் ஒரு குழந்தை பெற்றுக் கொண்டால் ரூ.62 லட்சம் வழங்கப்படும் என்று அறிவித்து அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியுள்ளது.**

தென் கொரியாவில் குழந்தை பிறப்பு விகிதம் கடந்த சில ஆண்டுகளாக தொடர் சரிவை சந்தித்து வருகிறது. 2022ம் ஆண்டு 0.78 ஆக இருந்த பிறப்பு விகிதம், 2026ம் ஆண்டில் 0.59 ஆக சரியும் என்றும் கணிக்கப்பட்டுள்ளது. அதுமட்டுமின்றி 1977ம் ஆண்டுக்கு பின் இல்லாத வகையில் மக்கள் தொகை 3.5 கோடி அளவிற்கு சரியும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நிலையில் தென்கொரியாவில் உள்ள Booyoung குழுமம் என்கிற கட்டுமான நிறுவனம் ஒன்று ஒரு குழந்தை பெற்றுக் கொள்ளும் ஊழியர்களுக்கு ரூ.62 லட்சம் வழங்கப்படும் என்றும் 3 குழந்தைகள் பெற்றுக் கொள்பவர்களுக்கு ரூ. 1.82 கோடி வழங்கப்படும் என்று தெரிவித்துள்ளது. இதே போல பியாங்யாங் குழும நிறுவனம் குழந்தை பெற்றுக் கொண்ட தனது ஊழியர்களுக்கு கடந்த 3 ஆண்டுகளில் மொத்தம் ரூ. 43.58 கோடி வழங்கி உள்ளதாக தெரிவித்துள்ளது. குழந்தைபிறப்புவிகிதங்களை அதிகரிக்க சீனாவிலும் இதுபோன்ற முயற்சிகள் எடுக்கப்பட்டன. உலகின் மிகப்பெரிய ஆன்லைன் டிராவல் ஏஜென்சியான Trip.com என்ற சீன நிறுவனம், தங்களது ஊழியர்களின் குழந்தைக்கு ஒன்றிலிருந்து ஐந்து வயது ஆகும் வரை வருடம் தோறும் இந்திய மதிப்பில் ரூ.1.1 லட்சம் வழங்கியது.

## சூடானில் நடந்த மோதலில் 9 ஆயிரம் பேர் பலி புலம்பெயர்ந்த 60 லட்சம் மக்கள்



**ஜூபா : பிப். 14,**

**சூடான் மோதலை தொடர்ந்து அந்நாட்டில் இருந்து தெற்கு சூடானுக்கு 5.4 லட்சத்திற்கும் மேற்பட்டோர் புலம்பெயர்ந்து சென்றுள்ளனர்.**

சூடான் நாட்டில் ராணுவம் மற்றும் துணை ராணுவ படையினருக்கு இடையேயான மோதலால் பொதுமக்கள் அதிகம் பாதிப்படைந்து உள்ளனர். லட்சக்கணக்கானோர் புலம்பெயர்ந்து சென்றுள்ளனர். இதுபற்றி ஐ.நா.வின் மனிதாபிமான அலுவல்கள் அமைப்பு கூறும்போது, சூடான் மோதலால் 9 ஆயிரம் பேர் பலியாகி உள்ளனர். 60 லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் சூடானுக்கு உள்ளேயும், வெளியேயும் புலம்பெயர்ந்து சென்றுள்ளனர். 2.5 கோடி பேர் உதவி தேவைப்படுவோராக உள்ளனர் என்று தெரிவித்து உள்ளது.

கடந்த 2023-ம் ஆண்டு ஏப்ரலில் இருந்து இதுவரை, சூடானில் இருந்து தெற்கு சூடானுக்கு 5.4 லட்சத்திற்கும் மேற்பட்டோர் புலம்பெயர்ந்து சென்றுள்ளனர். டிசம்பர் மத்தியில் சூடானில் மோதல் அதிகரித்ததும், அகதிகளின் வருகையும் அதிகரித்து உள்ளது என்று தெரிவித்து உள்ளது.

இந்த மோதல் பற்றி சேவ் தி சில்ட்ரன் என்ற சர்வதேச தொண்டு அமைப்பு வெளியிட்ட செய்தியில், சூடான் அகதிகள் பலர் தங்குவதற்கான முகாம்கள் அமைந்த அபெய் சிறப்பு நிர்வாக பகுதியில் கடந்த 2 வாரங்களில் 3 குழந்தைகள் உள்பட 75 பேர் உயிரிழந்து உள்ளனர். 2,200 பேர் புலம்பெயர்ந்து சென்றுள்ளனர் என தெரிவித்து உள்ளது.

## அமெரிக்காவில் ரெயில் நிலையத்தில் துப்பாக்கி சூடு – ஒருவர் பலி




**நியூயார்க் : பிப். 14,**

**அமெரிக்காவின் நியூயார்க் நகரில் உள்ள பிராங்க்ஸ் சுரங்கப்பாதை ரெயில் நிலையத்தில் ஏராளமான பயணிகள் ரெயிலுக்காக காத்து கொண்டிருந்தனர்.**

அப்போதுஅங்குதுப்பாக்கி சூடுநடந்தது. இளைஞர்களை கொண்ட இரு குழுக்களுக்கு இடையே தகராறு ஏற்பட்டு மோதல் வெடித்தது. இதில் துப்பாக்கியால் சுட்டுக் கொண்டனர். இதனால் அதிர்ச்சி அடைந்த பயணிகள் அலறியடித்து கொண்டு சிதறி ஓடினர்.

துப்பாக்கி சூட்டில் ஒருவர் உயிரிழந்தார். 5 பேர் காயம் அடைந்தனர். தகவல் அறிந்ததும் போலீசார் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்தனர். காயம் அடைந்தவர்களை மீட்டு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். துப்பாக்கி சூடு நடத்தியது யார்? எதற்காக தாக்குதல் நடத்தப்பட்டது உள்ளிட்ட தகவல்கள் உடனடியாக தெரியவில்லை.

இதுகுறித்து போலீசார் கூறும்போது, ரெயில் நிலையத்தில் நடந்த துப்பாக்கி சூட்டில் 34 வயதுடைய ஒருவர் பலியானார். ஒரு சிறுமி, ஒரு சிறுவன் உள்பட 5 பேர் காயம் அடைந்துள்ளனர். இது ஒரு தற்செயலான துப்பாக்கிச் சூடு என்று நாங்கள் நம்பவில்லை. தனி நபர் கண்மூடித்தனமாக ரெயில் அல்லது ரெயில் நிலையத்தின் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியதாக நம்பவில்லை.

இந்த சம்பவம் ரெயிலில் செல்லும் போது சண்டையிட்ட இரண்டு குழுக்களுக்கு இடையே நடந்துள்ளது. அந்த ரெயில் நிலையத்துக்குள் ரெயில் வந்தபோது ஒருவர் துப்பாக்கி சூடு நடத்தினார். மக்கள் ரெயிலில் இருந்து இறங்கி பிளாட்பாரத்தில் ஓடத் தொடங்கினர். மேலும் பிளாட்பாரத்திலும் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது என்றனர். இந்த சம்பவம் தொடர்பாக போலீசார் விசாரணை நடத்தி வருகிறார்கள். அமெரிக்காவில் துப்பாக்கிச் சூடு சம்பவங்கள் அதிகரித்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

## கட்டப்பட்டு வந்த தண்ணீர் பூங்காவில் கட்டுங்கடங்காத தீ : 16 பேர் காயம்



**ஸ்வீடன் : பிப். 14,**


**வட ஐரோப்பாவில் உள்ள நாடு, ஸ்வீடன். இதன் தலைநகரம் ஸ்டாக்ஹோம். ஸ்வீடனின் மேற்கு கடற்கரையோர நகரம், கோதன்பர்க்.**

இந்நகரில் “ஓஷியானா வாட்டர் பார்க்” எனும் புதிய தண்ணீர் பூங்கா கட்டப்பட்டு வந்தது. “லைஸ்பர்க் அம்யூஸ்மென்ட் பார்க்” எனும் பொழுதுபோக்கு பூங்காவின் விரிவாக்கமாக இது உருவாகி வந்தது. நேற்று முன்தினம் திங்கள்கிழமை ஓஷியானா தண்ணீர் பூங்காவில் பெரும் தீ விபத்து ஏற்பட்டது. கட்டுமானம் முடிந்து, பயன்பாட்டிற்கு இன்னும் வராத பல நீர்சறுக்கு அமைப்புகள் தீக்கிரையாகின. அப்பகுதி முழுவதும் கருமண்டலம் போல் புகை சூழ்ந்தது.

இந்ததீவிபத்தில் 16பேருக்கு லேசான காயம் ஏற்பட்டது. அவர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். இச்சம்பவத்தில் அதிர்ஷ்டவசமாக உயிரிழப்பு ஏதும் இல்லை. ஆனாலும், ஒருவர் காணவில்லை என்றும் அவரை தேடும் வேட்டையில்காவல்துறையினர் ஈடுபட்டுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. தீ விபத்திற்கானகாரணம்தற்போது வரை தெரியவில்லை.

தண்ணீர் பூங்காவை சுற்றியுள்ள ஒரு ஓட்டல் மற்றும் அருகிலிருந்த அலுவலகங்களில் இருந்து மக்கள் வெளியேற்றப்பட்டனர். மேலும், தீ முழுவதுமாக அணைக்கும் வரை தங்கள் வீடுகளுக்கு உள்ளேயே இருக்குமாறும், ஜன்னல்களையும்கதவுகளையும் தாழிட்டு கொள்ளவும் அப்பகுதி மக்களுக்கு அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. தீயணைப்புவீரர்கள்முழுவீச்சில் பணியாற்றி தீயை கட்டுக்குள் கொண்டு வரும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். இதனால் அப்பகுதியை இணைக்கும் அனைத்து சாலைகளும் மூடப்பட்டுள்ளன. அப்பகுதி முழுவதும் எரிந்த பிளாஸ்டிக் வாடை வீசுவதாக பொதுமக்கள் தெரிவித்தனர்.

## ரஷிய அச்சுறுத்தல் – டிரம்பின் கருத்து அச்சத்தில் ஐரோப்பிய நாடுகள்



**போலந்து : பிப். 14,**

**கடந்த 2022 பிப்ரவரி மாதம், ரஷியா “சிறப்பு ராணுவ நடவடிக்கை” எனும் பெயரில் தனது அண்டை நாடான உக்ரைனை ஆக்கிரமித்தது. இதனை எதிர்த்து அமெரிக்கா மற்றும் மேற்கத்திய நாடுகளின் ராணுவ மற்றும் பொருளாதார உதவியுடன் உக்ரைன் தீவிரமாக போரிட்டு வருகிறது.**

போர் 2-வது ஆண்டை நெருங்கும் நிலையில் உக்ரைனுக்கு உதவியளித்து வந்த அமெரிக்காவில் தற்போது நிதி நெருக்கடி ஏற்பட்டுள்ளது. இந்நிலையில், சில தினங்களுக்கு முன் அமெரிக்காவில் உரையாற்றிய முன்னாள் அதிபர் டொனால்ட் டிரம்ப், தான் மீண்டும் ஆட்சிக்கு வந்தால் தங்கள் நிதி பங்களிப்பை முறையாக வழங்காத நேட்டோ நாடுகளை ரஷியா தாக்கினாலோ அல்லது ஆக்கிரமித்தாலோ அமெரிக்கா உதவ முன் வராது என குறிப்பிட்டார். டிரம்பின் இந்த கருத்து பல ஐரோப்பிய நாடுகளுக்குரஷியாவைகுறித்த அச்சத்தை அதிகரித்துள்ளது.

ஐரோப்பிய கண்டத்தில் இரண்டாம் உலக போர் காலகட்டத்தில் ஜெர்மனி மற்றும் சோவியத் குடியரசு ஆகிய இரு பெரும் நாடுகளின் கட்டுப்பாட்டில் இருந்த நாடு, போலந்து. இதன் தலைநகரம் வார்சா. இரண்டாம் உலக போர் முடிந்த பிறகும் பல தசாப்தங்கள் ரஷியாவின் கட்டுப்பாட்டில் இருந்தது போலந்து. இப்பின்னணியில் போலந்து பிரதமர் டொனால்ட் டஸ்க், பிரான்ஸ் அதிபர் எம்மானுவல் மேக்ரன் மற்றும் ஜெர்மனி அதிபர் ஓலாப் ஸ்கால்ஸ் ஆகியோரை சந்தித்தார்.

இச்சந்திப்பு குறித்து அவர் தெரிவித்ததாவது: ரஷியாவை விட ராணுவ ரீதியாக பலம் குறைந்து இருப்பது பாதுகாப்பானது அல்ல. ராணுவ தளவாட மற்றும் ஆயுதங்களின் உற்பத்தியை அதிகரிக்க ஐரோப்பிய நாடுகள் ஒருங்கிணைந்து செயல்படுவது தற்போது மிக அவசியம். ஐரோப்பிய நாடுகள் சந்தித்து வரும் மிக பெரும் அச்சுறுத்தலை நாம் குறைத்து மதிப்பிடுவதும் ஆபத்து. ஐரோப்பிய நாடுகள், அடுத்து வரும் மாதங்களில் ராணுவ பலத்தை அதிகரிப்பதற்கு முன்னுரிமை தர வேண்டும். இவ்வாறு டஸ்க் கூறினார். டிரம்பின் தற்போதைய கருத்து, அமெரிக்க துருப்புகளுக்கும், அமெரிக்காவின் நேச நாடுகளுக்கும் ஆபத்தை விளைவிக்கலாம் என நேட்டோ தலைமை செயலாளர் ஜென்ஸ் ஸ்டால்டன்பர்க் கூறியிருந்தது குறிப்பிடத்தக்கது.

# கிளாம்பாக்கம் பேருந்து நிலையம் குறித்து சட்டப்பேரவையில் காரசார விவாதம்





# சாந்தன் தாயகம் செல்ல ஒருவாரத்தில் உத்தரவு உயர்நீதிமன்றத்தில் மத்திய அரசு தகவல்

# சபாநாயகர் திமுக உறுப்பினர் போன்று நடந்து கொண்டார்: அண்ணாமலை குற்றச்சாட்டு




சென்னை / புதுக்கோட்டை | 14.02.2024 | varalaruu.com | பக்கம்:6 | ரூ.10

புதுகை வரலாறு நாளிதழ்

14.02.2024 புதன்

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

பி. சாம்பமூர்த்தி , தமிழக இசையியல் அறிஞர் (பி.1901) (இ.1973)



மோகன் தாரியா , இந்திய அரசியல்வாதி, சமூகச் செயற்பாட்டாளர் (பி.1925) (இ.2013)



சுஷ்மா சுவராஜ் , இந்திய அரசியல்வாதி (பி.1952) (இ.2019)



## இன்றைய நினைவு நாள்

வி. டி. கிருஷ்ணமாச்சாரி , இந்திய அரசியல்வாதி (பி.1881) (இ.1964)



அ. ந. கந்தசாமி , ஈழத்து எழுத்தாளர் (பி.1924) (இ.1968)



யு நூ , பர்மாவின் 1வது பிரதமர் (பி.1907) (இ.1995)



## உலக காதலர் தினம்